KDK
SINCE 1909
JAPAN
CUSTOM AIR
EXPERIENCE
(011) 250 0823

Follow us:

# தமிழன்
THAMILAN

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர்: 05, இதழ்: 134 குரோதி வருடம், மார்கழி மாதம் 11ஆம் திகதி வியாழக்கிழமை
(26.12.2024) ஹிஜ்ரி 1446, ஜ. ஆகிர் - 24, 0115 886187 - விலை ரூ.40 பக்கங்கள் 12

KDK
SINCE 1909
JAPAN
CUSTOM AIR
EXPERIENCE
(011) 250 0823



நத்தார் பண்டிகையை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட பிரதான நத்தார் ஆராதனைகள் ஜா-எல வியாகுல மாதா ஆலயத்தில் பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தலைமையில் இடம்பெற்றது.



# இலங்கை ஆழிப்பேரலை அழிவு இன்றுடன் 20 வருடங்கள் நிறைவு

## பல இடங்களில் அஞ்சலி நிகழ்வுகள்

சுனாமி அனர்த்தம் மற்றும் ஏனைய அனர்த்தங்களால் உயிரிழந்த இலங்கையர்களை நினைவுகூரும் வகையில் இன்று (26) காலை 9.25 முதல் 9.27 மணிவரை இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்படவுள்ளது.

இலங்கையில் ஆழிப்பேரலை ஏற்பட்டு இன்றுடன் 20 வருடங்கள் நிறைவுபெறுகின்றன. 2004ஆம் ஆண்டு டிசம்பர் 26 ஆம் திகதி ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தால் நாட்டின் 14 கடலோர மாவட்டங்கள் பாதிக்கப்பட்டன. உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை சுமார் 35,000த்தை தாண்டியது. மேலும் 5,000 பேர் காணாமல் போயுள்ளனர். 34 பிரதேச செயலகங்களில் உள்ள 2,35,145 குடும்பங்களைச் சேர்ந்த 5,02,456 பேர் சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டனர்.

இதற்கிடையில், 'தேசிய துக்க தினம்' இன்று அனுஷ்டிக்கப்படுகிறது. மாவட்ட மட்டத்தில் இதற்காக பல்வேறு நினைவுகூரும் நிகழ்வுகள் நடைபெறவுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது. காலி, பறலிய சுனாமி நினைவுத்தூபிக்கு முன்னால் பிரதான வைபவம் இடம்பெறவுள்ளது.

இந்நாட்டில் பல்வேறு அனர்த்தங்களாலும் உயிரிழந்த அனைவரையும் நினைவுகூரும் வகையில் தேசிய துக்கதின அனுஷ்டிப்புகள் நாடளாவிய ரீதியில் இடம்பெறவுள்ளன.

Amritha
மனம் மகிழட்டும் நறுமணத்தால்
தமிழன்
உடன்
திருப்பதி புனித யாத்திரை
»05 பக்கம்

# உள்ளூராட்சித் தேர்தல் இழுபறி நீடிப்பு!

## ஏப்ரலில் நடக்குமா என்பதில் சந்தேகம்

நா.தினுஷா

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலை ஏப்ரல் மாதத்தில் நடத்த ஏற்கனவே அரசாங்கம் தீர்மானித்திருந்தபோதிலும், அரசாங்கம் திட்டமிட்டபடி தேர்தல் இடம்பெறுமா என்பதில் அச்சம் நிலவுகிறது. தேர்தலை நடத்த முன்னர் அதற்கான சட்டதிருத்தங்களை மேற்கொள்ள அரசாங்கம் முன்னதாக தீர்மானித்திருந்த நிலையில், அதற்கான ஏற்பாடுகள் துரிதகதியில் இடம்பெறுவதற்கான அறிகுறிகள் தென்படவில்லை.

அண்மையில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தமிழரசுக் கட்சியின் உறுப்பினர்களைச் சந்தித்தபோது, அரசாங்கம் முன்னர் அறிவித்ததைப்போன்று உள்ளூராட்சித் தேர்தலை நடத்தும் தீர்மானத்தில் உறுதியாக இருப்பதாக ஜனாதிபதி தெரிவித்தாரென பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் அறிவித்திருந்தார். எவ்வாறாயினும், உள்ளூராட்சி...

»02 பக்கம்

# இடைநிறுத்தப்பட்ட திட்டங்களால் அரசுக்கு நட்டம் ரூ.381கோடி

»02பக்கம்

சாமியே சரணம் ஐயப்பா
அகில இலங்கை
சபரி தீர்த்த யாத்திரைக் குழு வழங்கும்
மகர ஜோதி மண்டல பூஜை




கொழும்பு, செட்டியார் தெரு நாட்டுக்கோட்டை நகரத்தார் புதிய கதிரேசன் ஆலயத்தின் அகில இலங்கை சபரி தீர்த்த யாத்திரைக் குழு வழங்கும் மகர ஜோதி மண்டல பூஜைகள் இன்று இடம்பெறவுள்ளன.
காலை கணபதி ஹோமத்துடன் மகா மண்டல பூஜை ஆரம்பமாகி சபரி ஐயப்பனுக்கு அபிஷேக அலங்காரம் ஆனந்த மிகு பஜனை இடம்பெற்று அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும்.
அதனைத் தொடர்ந்து மாலை 6 மணியளவில் கன்னி சாமிகளுக்கான விசேட பூஜை, சிறப்பு தீபாராதனை நடைபெற்று பக்த அடியார்களுக்கு விபூதிப் பிரசாதம், அன்னதானம் வழங்கப்படும்.
இந்நிகழ்வுகள் அனைத்துக்கும் இலங்கையின் முதல் தர பத்திரிகையான 'தமிழன்' ஊடக அனுசரணை வழங்குகிறது.
தமிழன்
தமிழன்

# பண மோசடிகள் அதிகரிப்பு

»02பக்கம்

## கமெண்ட் கந்தர்...



குறைந்த விலையில விற்கக்கூடிய சாராயம் தயாரிக்குதாம் அரசாங்கம்... அப்படியே குறைஞ்ச விலையில அரிசி, தேங்காயை கொடுக்க ஏதும் திட்டமில்லையோ?

# அஸ்வெசும கொடுப்பனவில் புதிய மாற்றம்

»02பக்கம்

## உஷ்



அமைச்சரவையில் சிறிய மாற்றமொன்றை செய்ய அரச மேல்மட்டத்தில் ஆலோசிக்கப்பட்டுள்ளது. முஸ்லிம் ஒருவருக்கு அமைச்சுப் பதவியை வழங்கவும், ஏற்கனவே வழங்கப்பட்ட அமைச்சுப் பொறுப்புகளில் சிறு மாற்றங்களை செய்யவும் ஆலோசிக்கப்படுகிறது.

இதற்கப்பால் கிழக்கு, வடக்கு மாகாணங்களைச் சேர்ந்தவர்களுக்கு பிரதி அமைச்சுகளை வழங்குவதற்கும் ஆராயப்பட்டு வருகிறது.




ஜனவரி முதல்...
ஜூனியர் சிட்டு
பாலர் பாடசாலை சிறார்களுக்காக...




விலை ரூ.100/= மட்டுமே
அரச பாடத்திட்டத்திற்கு அமைவாக தொகுக்கப்பட்டு வெளிவருகிறது
பிரதிகளை பெற்றுக்கொள்ள அழையுங்கள்
0777983308/0741684643

ஓம் கன்னிமூல கணபதி பகவானே சரணம் ஐயப்பா
அகில இலங்கை சபரி தீர்த்த யாத்திரைக்குழுவின்
மகரஜோதி மண்டலபூஜை சிறப்புற நடைபெற வாழ்த்துகள்



அனைவருக்கும்
ஐயப்பன் அருள்
கிடைக்க வேண்டுகிறேன்...
வே.இராதாகிருஷ்ணன் - எம்.பி.
தலைவர் - மலையக மக்கள் முன்னணி




சாமியே சரணம் ஐயப்பா

# முல்லைத்தீவில் இறங்குதுறையொன்று அவசியம்

## கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் வலியுறுத்து

முல்லைத்தீவு மாவட்டத்தில் கப்பல் இறங்குதுறையொன்று இல்லாத காரணத்தால்தான் மியன்மார் அகதிகள் திருகோணமலைக்கு கொண்டுசெல்லப்பட்டு மீண்டும் முல்லைத்தீவு கேப்பாப்பிலவுக்கு கொண்டுவரப்பட்டுள்ளனர். இதுவே இந்த அவல நிலைக்கு காரணமென முள்ளிவாய்க்கால் மேற்கு வளர்மதி கடற்றொழி லாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் ஆறுமுகம் சிவனேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு ஊடக அமையத்தில் நேற்று (25) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

"ஜனாதிபதிக்கும் கடற்றொழில் அமைச்சருக்கும் எனது நன்றியையும் வாழ்த்தையும் தெரிவிக்கிறேன்.

மிக நீண்டகாலமாக முல்லைத்தீவு கடல் பிரதேசத்தில் இந்திய இழுவைப்படகுப் பிரச்சினை காணப்படுகின்றது. ஜனாதிபதி கடந்த வாரம் இந்தியாவுக்குச் சென்றிருந்தார். அங்கு மீனவர் சம்பந்தமான விடயங்கள் குறித்து ஆராயப்பட்டுள்ளன. 2025ஆம் ஆண்டு முதல் ஜனாதிபதியின் ஆட்சிக்காலத்திலேயே இந்திய இழுவைப்படகு விடயம் குறித்து ஆராயப்பட்டு கதைத்து முடிவெடுப்பார்கள். எங்கள் கடலுக்குள் இந்திய இழுவைப் படகுகள் வருவதை உடனடியாக நிறுத்தவேண்டும்.

இந்திய இழுவைப்படகை நிறுத்தினால் தான் எங்கள் பிரதேசங்களில் தடைப்பட்ட தொழில்களான சுருக்குவலை,வெடிவைத்து மீன்பிடித்தல் போன்றவற்றையும் கட்டுப்படுத்தி கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தக்கூடியவாறு இருக்கும்.

இதனை புதிய ஜனாதிபதியும் கடற்றொழில் அமைச்சரும் ஒருங்கிணைந்து இதற்கான தீர்வைத் தருவார்களென எதிர்பார்க்கின்றோம். முல்லைத்தீவு மாவட்டத்தில் கரைவலை உரிமையாளர் சங்கம் என்று ஒன்று உள்ளது. அங்கு நடக்கும் பிரச்சினைகளான கரைவலை கம்பான் பிரச்சினைகளை மட்டுப்படுத்தி கரைவலைச் சட்டங்கள் இங்கு அமுலாவதில்லை. இவை சரியான முறையில் இயங்கவேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்த அவர் முல்லைத்தீவு மாவட்டத்தின் சாலை, நந்திக்கடல், இரட்டைவாய்க்கால் போன்ற சிறுகடல் ஆழப்படுத்தி வீச்சுதொழிலாளர்களின் வாழ் வாதாரத்தை மேம்படுத்தவேண்டுமென நம்பி நிக்கிறோம்.

முள்ளிவாய்க்கால் மேற்கு வளர்மதி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் கடற்பரப்பு எல்லைக்குள் மியன்மார் நாட்டுப் படகொன்று கரைசேர்ந்துள்ளது. சங்கத்தின் தலைவர் என்ற வகையில் நான் கரையில் நின்று சகல தரப்பினருடனும் தொடர்பை ஏற்படுத்தி அந்த மக்களுக்கான மனிதாபிமான உதவிகளை மேற்கொண்டுள்ளேன்.

நானும் முள்ளிவாய்க்கால் சங்க அங்கத்தவர்களும் மக்களும் திரண்டு அந்த இடத்தில் அந்த அகதிகளை கரையிறக்கவேண்டுமென்ற நோக்கத்தில் நின்றோம். சாப்பாடு, உலருணவுப் பொதிகள், குடிதண்ணீர் என்பன அந்த அகதிகளுக்கு வழங்கினோம். ஆனால், அந்த உயிர்களைக் கடலிலிருந்து காப்பாற்றிக்கொள்ளவேண்டுமென்பதற்காக முயற்சித்தோம். வள்ளத்தை அணைப்பதற்கான துறைமுகம் எங்கள் மாவட்டத்தில் இல்லை. அதிகாரம் கொண்ட ஜனாதிபதிக்கும் கடற்றொழில் அமைச்சருக்கும் ஏனைய அதிகாரிகளுக்கும் அறிவித்துக்கொள்வது யாதெனில், முல்லைத்தீவு மாவட்டத்தில் வள்ளங்கள் தரித்துநிற்கக்கூடிய துறைமுகம் ஒன்று கட்டப்படவேண்டும்.

துறைமுகமொன்று இருந்திருந்தால் மியன்மார் அகதிகளை முள்ளிவாய்க்காலிலிருந்து திருகோணமலை சென்று மீண்டும் கேப்பா பிலவுக்கு கொண்டுவந்திருக்கவேண்டிய நிலை ஏற்பட்டிருக்காது. முல்லைத்தீவு மாவட்டத்தில் சரியான இடத்தைத் தெரிவுசெய்து இறங்குதுறை ஒன்றை அமைக்கவேண்டுமென ஜனாதிபதியை வேண்டி நிற்கின்றேன்.

மியன்மார் அகதிகள் படகு முள்ளிவாய்க்கால் மேற்கு கடலில் கரைதட்டியபோது முள்ளிவாய்க் கால் மேற்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கதின் அதிகளவான நிதியில் உலருணவுக்கான உதவி செய்துள்ளோம். முல்லைத்தீவு மாவட்ட சமாசம் எரிபொருள் குளிர்பான ஒழுங்குகளைச் செய்துள்ளது. புதுக்குடியிருப்பிலிருந்து வந்த இளைஞர்கள் நால்வர் அந்த அகதிகளைப் பார்க்கவேண்டுமென்று உலருணவுப் பொதி களை வழங்கினார்கள். இராணுவத்தினர் உணவுகளை வழங்கினார்கள். கடற்படையினரும் உலருணவுகளை வழங்கினார்கள். இவ்வாறு அந்த மக்களின் பசியைப் போக்கி அவர்க ளின் உயிர்களைக் காப்பற்றினோம். அதன் பின்னர் கடற்படையினர் அந்தப் படகை திருகோணமலைக்கு கொண்டுசென்று அந்த அகதிகளை மீண்டும் முல்லைத்தீவு கேப்பாபிலவு விமானப்படைத்தளத்துக்கு கொண்டுவந்துள் ளார்கள்.

அகதிகளாக வந்த அந்த மக்களை நல்ல முறை யில் அரசாங்கம் கவனிக்குமென்று நாங்கள் நம்பிநிற்கின்றோம்.

முள்ளிவாய்க்கால் மேற்கு கடற்றொழிலாளர் களுக்குச் சொந்தமான கடல் எல்லைக்குள் இந்தக் கப்பல் வந்ததால் எங்கள் சங்கத்தினர்தான் ஒருநாள் முழுவதும் நின்று அந்தந்த மக்களுக்கான உதவிகளை வழங்கினர்.

பொன்னம்பலம் ஜீவன் என்ற கடற்றொழி லாளியின் படகு உள்ளிட்ட இரண்டு படகுகள் தான் கரையிலிருந்து கப்பல் வரைக்கும் உலருண வுப்பொதிகளைக் கொண்டுசெல்வதாக இருந்தாலும் சரி, கடற்படை யினரைக் கொண்டுசெல்வதாக இருந்தாலும் சரி, மருத்துவர்கள், சுகாதாரத் தரப்பினரைக் கொண்டுசெல்வதாக இருந்தாலும் சரி இருபது தடவைகளுக்கு மேல் கடல் அடிக்கு மத்தியில் சேவையைச் செய்தன என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# யாழில் மார்கழிப் பெருவிழா!

■ பு.கஜிந்தன்

தென்னாட்டு அருள்மிகு ஐம்பூதநாதர் திருக்கோவில் மற்றும் தென்னாட்டு அருள்மிகு ஐம்பூதநாதர் திருக்கோவில் மாணவர் சபையின் ஏற்பாட்டில், மார்கழிப் பெருவிழாவில் ஆன்மீக சிந்தனையை வெளிப்படுத்தும் வகையில் மார்கழித்திங்கள் 10 நாள் நிகழ்வு நேற்று (25) யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

திருமுறைகள், நகர் ஊர்வலம் இதன்போது இடம்பெற்றன. இவ் நகர் ஊர்வலமானது வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரா தேவஸ்தான முன்றிலில் இருந்து ஆரம்பமாகி கே.கே.எஸ் வீதி, யாழ். வைத்தியசாலை வீதி, மணிக்கூட்டுக் கோபுர வீதியூடாகச் சென்று யாழ். இந்திய மத்திய கலாசார மத்திய நிலையம்வரை சென்று நிறைவுபெற்றது.

தமிழர்களின் பாரம்பரிய கலையான பொம்மலாட்டம் உள்ளிட்ட கலைகளும் நகர் ஊர்வலத்தை அலங்கரித்ததுடன் இரு யானைகளும் பவனி வந்தன.



இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக வடமாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் கலந்து கொண்டார்.

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிய 1,023 திருமுறைகள், திருநாவுக்கரசு நாயனார் அருளிய 456 திருமுறைகள், சுந்தரமூர்த்தி நாயனார் அருளிய 07ஆம் திருமுறைகள், மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய 08 ஆம் திருமுறைகள், திருமூலதேவர் அருளிய 10 ஆம் திருமுறைகள், 12 ஆழ்வார்கள் அருளிய 11 ஆம் திருமுறைகள், தெய்வச்சேக்கிழார் அருளிய 12 ஆம் திருமுறைகள், மெய்கண்ட சமுத்திரம் போன்ற நூல்கள் அடங்கிய தொகுதிகளை வடமாகாண ஆளுநர் நா.வேதநாயகனிடம் இந்திய பழனி ஆதீன குருவானவர் கையளித்தார்.

இவ் நிகழ்வில் வடமாகாண பிரதம செயலாளர் ஏ.எல்.இளங்கோவன், தஞ்சாவூர் பல்கலைக்கழக பேராசிரியர் முனைவர் ச.நல்லசிவம், செந்தமிழ் சொல் வித்தகர் பழனி குமாரலிங்கம், கொழும்பு பல்கலைக்கழக தமிழ் துறை பேராசிரியர் த.பிரசாந்தன், தவத்திரு வேலன் சுவாமிகள், ஆன்மீகத்தினர்கள் மற்றும் மாணவர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

## அஸ்வெசும...

அஸ்வெசும நலன்புரிக் கொடுப்பனவு யோசனை முறையின் கீழ் அனுமதி வழங்கப்பட்டுள்ள குடும்பங்கள் மற்றும் நபர்களுக்கு ஜனவரி மாதத்திலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் புதிய மாதாந்த நலன்புரிக் கொடுப்பனவு முறையை அறிவித்து நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவினால் அதிவிசேட வர்த்தமானியொன்று வெளியிடப்பட்டுள்ளது.

இதுவரையில் நடைமுறையிலிருந்த முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் கடந்த மே மாதம் 17ஆம் திகதி வெளியிடப்பட்ட அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் கடந்த 21ஆம் திகதி வெளியிடப்பட்ட புதிய வர்த்தமானியினூடாக இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

ஏற்கனவே வெளியிடப்பட்டிருந்த வர்த்தமானி அறிவித்தலின்படி, இதுவரையில் வறுமையான குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட 8,500 ரூபா கொடுப்பனவு மற்றும் கடுமையாகப் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட 15,000 ரூபா கொடுப்பனவு புதிய வர்த்தமானியினூடாக முறையே 10,000 ரூபா மற்றும் 17,500 ரூபா என்ற அடிப்படையில் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன் ஏனைய தரப்புகளுக்கு வழங்கப்பட்ட கொடுப்பனவுத் தொகை இந்த வர்த்தமானியில் மாற்றப்படவில்லை.

புதிய வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம், 4,80,000 நிலையற்ற குடும்பங்களுக்கு 2025ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் மார்ச் மாதம் வரை 5,000 ரூபாவும் ஆபத்துக்குட்பட்ட 4,80,000 குடும்பங்களுக்கு ஜனவரி மாதம் முதல் டிசம்பர் வரை 5,000 ரூபாவும் 2025 ஜனவரி மாதம் முதல் 2026 ஜூன் மாதம் வரை 9,60,000 வறிய குடும்பங்களுக்கு 10,000 ரூபாவும் 2025 ஜனவரி முதல் 2026 ஜூன் வரை 4,80,000 மிகவும் வறிய குடும்பங்களுக்கு 17,500 ரூபா கொடுப்பனவும் வழங்கப்படுமென்று இந்த வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று, ஜனவரி மாதம் முதல் ஜூன் மாதம் வரை இதற்கு முன்னர் வழங்கப்பட்டதைப் போன்று 4,10,000 மாற்றுத்திறனாளிகளுக்கான உதவி பெறுபவர்களுக்கு 7,500 ரூபாவும் 50,000 சிறுநீரக நோய்க்கான உதவி பெறுபவர்களுக்கு 7,500 ரூபாவும் 8,20,000 முதியவர்களுக்கான உதவி பெறுபவர்களுக்கு 3,000 ரூபாவும் வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்த வர்த்தமானி அறிவித்தலா னது பாராளுமன்ற அனுமதி கிடைத்த நாளிலிருந்து அமுலாகுமென்று ஜனாதிபதியினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## உள்ளூராட்சித் தேர்தல்...

மன்றத் தேர்தல் சட்டத்தை திருத்தம் செய்யாமல் உள்ளூராட்சி மன்ற சபைத் தேர்தல் வாக்கெடுப்பு தினத்தை தீர்மானிப்பதில் சட்டச்சிக்கல் காணப் படுகிறது. ஆகவே, சட்டதிருத்தப் பணிகளை விரைவாக நிறைவுசெய்யுமாறு தேர்தல் ஆணைக்குழு உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் மாகாண சபைகள் அமைச்சுக்கு முன்னதாக அறிவு றுத்தியிருந்தது.

ஏற்கனவே ஏற்றுக்கொள்ளப்பட்ட வேட்பு மனுக்களை இரத்துச் செய்து புதிதாக வேட்பும னுக்களைக் கோருவதாயின் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் சட்டத்தில் திருத்தம் செய்யவேண்டுமென தேர்தல் ஆணைக்குழு உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் மாகாண சபைகள் அமைச்சுக்கு அறிவுறுத்தியிருந்தது. உள்ளூராட்சி மன்ற தேர்தல் சட்டத்தை 2025ஆம் ஆண்டு ஜனவரி மாதமளவில் திருத்தம் செய்வதாக பொது நிர்வாகம், உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் மாகாண சபைகள் அமைச்சு தேர்தல் ஆணைக்குழுவுக்கு எழுத்துமூலமாக அறிவித்துள்ளது.

உத்தேச உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு 80 ஆயிரம் வேட்பாளர்கள் போட்டியிடுவார்களென்று எதிர்பார்க்கப்படுகின்ற நிலையில், தேர்தல் செலவுகளை மதிப்பிடுவது கடினமானதெனவும் தேர்தல் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது. எவ்வாறாயினும், தேர்தல் செயற்பாடுகள் தொடர்பில் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி பிரதி அமைச்சர் நுவன் சௌரத்திடம் வினவியபோது அவர் கூறியதாவது,

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்காக பழைய வேட்பு மனுக்களை இரத்துச் செய்து புதிதாக வேட்புமனுக்களைக் கோருவதற்காக சட்டமூலத்தைத் தயார் செய்துவிட்டோம். ஆனால், அது அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதா என்பதை உறுதியாகக் கூற முடியாது. அநேகமாக ஜனவரி மாதத்தில் பாராளுமன்றத்தில் சட்டமூலத்தை சமர்ப்பிக்க எதிர்பார்த்திருக்கிறோம். விரைவில் தேர்தலை நடத்தவேண்டியிருக்கிறது. ஏப்ரல் மாதமாகும்போது உள்ளூராட்சித் தேர்தலை நடத்தி முடித்துவிட வேண்டுமென்று அறிவித்திருக்கிறோம். எனவே, இருக்கும் குறுகிய காலப்பகுதியில் ஏனைய செயற்பாடு களை விரைவாகச் செய்யவேண்டி ஏற்படும். இல்லாவிட்டால், திட்டமிட்டபடி செய்வதில் சிக்கல் ஏற்படலாம்.

எப்படியாயினும், சட்டமூலத்தைப் பாராளுமன் றத்துக்கு சமர்ப்பிப்போம். ஜனவரி மாதம் இடம்பெறும் பாராளுமன்ற அமர்விலேயே சட்டமூலத்தை சபையில் சமர்ப்பிப்பதா என்பது தொடர்பில் கலந்துரையாடவேண்டியுள்ளது. கலந்துரையாடியதன் பின்னரே இது தொடர்பில் தீர்மானம் எடுக்கவேண்டுமென்று குறிப்பிட்டார். இந்நிலையில், நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார கூறுகையில்,

உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பான ஏற்பாடுகள் தொடர்பில் உறுதியாகக்கூற முடியாது. சற்றுக் கால அவகாசம் தருமாறு குறிப்பிட்டார்.

இதேவேளை, புதிய வேட்புமனுக்களில் மாத்திரம் தங்கிவிடாமல் இன்னும் ஒருபடி மேல் சென்று கிடைத்துள்ள வாய்ப்பைப் பயன்படுத்தி விரைவாக சட்டமூலத்திலுள்ள ஏனைய நடைமுறைப் பிரச்சினைகளுக்கு இந்தத் திருத்தத்தினூடாக தீர்வைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று எதிர்க்கட்சியினால் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பி. பெரேரா கருத்துத் தெரிவிக்கையில்,

புதிதாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள சட்டமூலத் தில் ஒருசில குறைபாடுகள் இருப்பதாகவும் அவற்றைத் திருத்தம் செய்யவேண்டுமென்று குறிப்பிட்டுள்ளார்.

புதிய வேட்புமனுக்களுக்கு அழைப்பு விடுக்க அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது. அதற்கு நாங்களும் இணக்கத்தைத் தெரிவிக்கி றோம். அநேகமான வேட்பாளர்கள் உயிரி ழந்திருக்கிறார்கள்.

அநேகமானவர்கள் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளார்கள். ஒருசிலர் கட்சிகளிலிருந்து மாறியுள்ளார்கள். அதனால், புதிய வேட்புமனுக்களுக்கு அழைப்பு விடுப்பதே ஜனநாயகத்துக்கு ஏற்புடையதாக இருக்கும். ஆனால், தற்போது தயாரிக்கப்பட்டுள்ள சட்டமூலத்துக்கமைய அதற்கப்பால் செல்ல வேண்டிய வாய்ப்பு மறுதலிக்கப்பட்டுள்ளது. இந்தச் சட்டமூலத்தில் ஒருசில குறைபாடுகள் இருக்கின்றன. இலகுவாக நிவர்த்திசெய்யக்கூடிய சில குறைபாடுகளும் இருக்கின்றன.

புதிய சட்டத்தைக் கொண்டுவரும்போது ஒரே நேரத்தில் அந்தக் குறைபாடுகளை நிவர்த்தி செய்ய முடியுமாக இருந்தால் அது பெறுமதியை ஏற்படுத்தும். அதேபோன்று, இந்தச் சட்டமூலத்தில் இருக்கும் தேர்தல் ஆணைக்குழுவினால் அடையாளம் காணப்பட்டுள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்து கொள்வது ஏற்புடையதாக இருக்கு மென்றே ஐக்கிய மக்கள் சக்தி கருதுகிறது. புதிய வேட்புமனுக்களில் மாத்திரம் தங்கிவிடாமல் இன்னும் ஒருபடி மேல் சென்று கிடைத்துள்ள வாய்ப்பைப் பயன்படுத்தி விரைவாக சட்டமூலத்தி லுள்ள ஏனைய நடைமுறைப் பிரச்சினைகளுக்கு இந்தத் திருத்தத்தினூடாக தீர்வைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று யோசனை முன்வைத்துள்ளோம் என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

# தகவல் தொழில் நுட்பத்திறன்; நிர்வாக அதிகாரிகளுக்கு செயலமர்வு







■ ஜே.எம்.ஹாபீஸ்

மத்திய மாகாண அரச ஊழியர்களில் நிர்வாக அதிகாரிகளுக்கு, கைத் தொலைபேசி ஊடாக புகைப்படம் எடுத்தல், வீடியோ எடுத்தல், மற்றும் கைத் தொலைபேசி தொடர்பான தகவல் தொழில் நுட்பத்திறன்களை எவ்வாறு பிரயோகிப்பது என்பது தொடர்பான செயலமர்வு கண்டி, பல்லேகலை மாகாண சபை கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்றது.

மத்திய மாகாண முகாமைத்துவ, பயிற்சி அபிவிருத்தி பிரிவு இதனை ஒழுங்கு செய்தி ருந்தது.

நவீன காலத்தில் நிர்வாக அதிகாரிகளாக இருப்பவர்களுக்கு கையடக்கத் தொலை பேசியூடாக தகவல் பரிமாற்ற அறிவுத் தேவை என்பதை வலியுறுத்தி இச்செயலமர்வு இடம் பெற்றது.

மத்திய மாகாண முகாமைத்துவ, பயிற்சி அபிவிருத்தி பிரிவின் பணிப்பாளர் திலினி தெஹிகொல்ல வழிகாட்டலில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பேராதனைப் பல்கலைக்கழக ஊடகப் பிரிவின் வெளிவாரி விரிவுரையாளர் ஹிஹான் கம்பாரபிட்டிய புகைப்படம் எடுத்தல், வீடியோ எடுத்தல் அவற்றை செம்மைப் படுத்தல் போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பாக செயன்முறைப் பயிற்சிகளுடன் விளக்கமளித்தார்.

# 24 மணி நேரத்தில் போக்குவரத்து விதிகளை மீறிய 8,747 பேருக்கெதிராக சட்ட நடவடிக்கை

மதுபோதையில் வாகனம் செலுத்திய 251 நபர்கள் உட்பட மொத்தம் 8,747 வாகனச் சாரதிகளுக்கு எதிராக போக்குவரத்துச் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் கடந்த 24 மணித்தியாலங் களில் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை பொலிஸ் தெரிவித்துள்ளது.

பதில் பொலிஸ் மா அதிபரின் (IGP) அறிவுறுத்தல்களுக்கிணங்க, வீதி விபத்துகளைக் குறைக்கும் நோக்கில் நாடளாவிய ரீதியில் விசேட சோதனை நடவடிக்கை பண்டிகைக் காலம் முழுவதும் மேற்கொள்ளப்படுகின்ற நிலையில், கடந்த 24 மணி நேரத்தில் 8,747 பேருக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பாக வாகனம் ஓட்டவும் மது அருந்திவிட்டு வாகனம் ஓட்டுவதைத் தவிர்க்கவும் போக்குவரத்துச் சட்டங்களைக் கடைப்பிடித்து உயிர்களைப் பாதுகாக்குமாறும் இலங்கை பொலிஸ் பொதுமக்களை கேட்டுக்கொள்கிறது.

## பண மோசடிகள்...

நத்தார் பண்டிகைக் காலம் மற்றும் புதுவருட பிறப்பை இலக்காகக் கொண்டு, திட்டமிட்ட குழுவினரால் மீண்டும் பண மோசடிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அது தொடர்பான முறைப்பாடுகள் அதிகரித்துள்ளதாகவும் கணினி அவசர பதிலளிப்புப் பிரிவின் பிரதான தகவல் பாதுகாப்பு அதிகாரி நிரோஷ் ஆனந்த (CERT) நிறுவனம் தெரிவித்துள்ளது. இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நத்தார் பண்டிகைக் காலம் மற்றும் புதுவருட பிறப்பை இலக்காகக் கொண்டு ஒருசில திட்ட மிட்ட குழுவினால் மீண்டும் பண மோசடிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. திட்டமி டப்பட்ட குழுவினரால் பொதுமக்களை ஏமாற்றி நிதி மோசடி செய்யும் சம்பவங்கள் தொடர்பான முறைப்பாடுகள் அண்மைக் காலத்தில் அதிகரித் துள்ளன. இதில் விரைவான அதிகரிப்பையும் எதிர்பார்க்கக்கூடியதாக இருக்கிறது.

எனவே, ஏதாவதொரு சந்தர்ப்பத்தில் யாராவது வங்கிக் கணக்கு, தொலைபேசி இலக்கங்களுக்கு அனுப்பி வைக்கப்படும் குறுஞ்செய்திகள், இரகசியக் குறியீடுகள் (Pass Word) என்பவற்றைக் கேட்டால் மூன்றாம் தரப்பினருக்கு அதனைப் பெற்றுக்கொடுக்கக் கூடாது. மக்கள் எச்சரிக்கையாக செயற்பட வேண்டும்.

பரிசு கிடைத்துள்ளதாகவும் விசேட கழிவு அல்லது ஏதாவதொரு நிறுவனத்தில் பொருள் கொள்வனவுக்காக வவுச்சர் கிடைத்துள்ளதாகவும் தெரிவித்து வங்கிக் கணக்குகள் தகவல்களைப் பெற்றுக்கொண்டு அல்லது வங்கிகளில் தகவல்களைப் பெற்றுக்கொண்டு ஏதாவதொரு முறையில் குறுஞ்செய்தி அனுப்பி வைக்கப்பட்டால் அதனை மூன்றாம் தரப்புக்கு பகிர வேண்டாம். போலியான முறையில் திட்டமிட்ட தரப்பினர் நபர்களை ஏமாற்றி நிதி மோடி செய்யத் தயாராக இருப்பதாக சுட்டிக்காட்டியுள்ளார்.

## இடைநிறுத்தப்பட்ட..

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நன்கொடையில் கடந்த 2020ஆம் ஆண்டு மாகாண சபை நிதியத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட நீர் விநியோக வேலைத்திட்டம் உள்ளிட்ட 32 வேலைத்திட்டங்கள் கடந்த 2022 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் முதல் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

அதன் காரணமாக அந்த வேலைத்திட்டங்களுக் காக ஒதுக்கீடு செய்யப்பட்ட 381 கோடி ரூபா நிதி அரசுக்கு நட்டம் ஏற்பட்டுள்ளதாக தேசிய கணக்காய்வு அலுவலகத்தினால் வெளியிடப் பட்டுள்ள கணக்காய்வு அறிக்கையில் உறுதிப்படுத் தப்பட்டுள்ளது.

தேசிய கணக்காய்வு அலுவலகம் கூறுவ தன்படி, முறையான நீர்விநியோக வசதி இன்மை, குறித்த இடங்களுக்கு போக்குவரத்துச் செய்ய போக்குவரத்து வழிகள் இன்மை, நிர்மாணிக்கப் பட்டுவரும் கட்டடங்கள் அனுமதிக்கப்பட்ட திட்டங்களின் பிரகாரம் அமையாமை உள்ளிட்ட காரணங்களினால் இந்த வேலைத்திட்டங்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சந்தைகளை நிர்மாணித்தல், விலங்கு கட்டுப்பாட்டு நிலையங்கள், சமுர்த்தி வேலைத்திட் டங்களுக்காக கட்டடங்களை நிர்வகிப்பதற்கான ஒரு நிலையத்தை ஆரம்பித்தல் போன்ற வேலைத்திட்டங்கள் மக்களின் கோரிக்கைகள் இன்றியே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. சில வேலைத்திட்டங்கள் சாத்தியப்பாடுகள் தொடர்பில் ஆராயாமலேயே ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அதேபோன்று மாகாண சபைகளின் அனுமதியுடன் ஆரம்பிக்கப்பட்ட அதிக எண்ணிக்கையிலான நீர்த்தாங்கிகள், தரை மட்டத்தை கவனத்தில் கொள்ளாமல் நிர்மாணிக்கப்பட்டுள்ளதாகவும் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதேபோன்று நீர் சுத்திகரிப்பு இயந்திரங்களில் போதுமான கொள்ளளவு இன்மையினால் 25 வரையிலான நீர் வேலைத்திட்டங்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. இந்த நிர்மாணங்கள் தொடர்பில், இடைநிறுத்தப்பட்ட சகல வேலைத்திட்டங்களும் எவ்வித திட்டமுமின்றி மேற்கொள்ளப்பட்டுள்ளமையே இவற்றின் பொது பண்புகள் என்று அந்தக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## தினசரி பலாபலன்கள்

**குரோதி வருடம் மார்கழி மாதம்**
**11ஆம் நாள் வியாழக்கிழமை**

**மேஷம்** தொழில் விடயத்தில் கவனமாக இருக்காவிட்டால் வீண் பழி வரலாம்.உடல் நோய்கள் கவனம். தூரப் பயணங்களை தவிர்க்க.

**ரிஷபம்** நண்பரின் விருந்துபசாரத்தில் கலந்து கொள்வீர்கள்.மனைவியால் அதிக நன்மைகளைப் பெறுவீர்கள். காதல் வெற்றி.

**மிதுனம்** புது நண்பர்கள் அறிமுகமாவார்கள். பகைவர்கள் விலகிச்செல்வார்கள். வெளிநாட்டு இலாபங்கள் உண்டு.

**கடகம்** பயணங்களில் இடையூறு ஏற்படும்.உடல் நோய்களை அசட்டை செய்யாதீர்கள். தேவையற்ற தொடர்பு வேண்டாம்.

**சிம்மம்** யாரையும் நம்பமுடியாமல் தவிப்பீர்கள். எதிர்கால வாழ்வுக்கு திட்டமொன்றை தீட்டுவீர்கள். எதற்கும் கவலை வேண்டாம்.

**கன்னி** இன்ப அனுபவங்களால் மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.முயற்சிகளில் வெற்றி கிட்டும். தொட்டது துலங்கும் நாள்.

**துலாம்** பணம், பொருள் விரையமாவதை எண்ணி கவலை அடைவீர்கள். நினைத்த காரியங்கள் சற்று தாமதமாகி நடக்கும்.

**விருச்சிகம்** மனதில் ஒருவித படபடப்புத் தன்மை இருக்கும். வீண் வம்புச் சண்டையை விலை கொடுத்து வாங்காதீர்கள்.

**தனுசு** வீண் பணவிரயமும் மருத்துவச் செலவுகளும் ஏற்படும்.கோபத்தை குறைத்துக் கொள்வது நல்லது

**மகரம்** தொழில், வியாபார இலாபம், எதிர்ப்பார்த்திருந்த வெளிநாட்டு பயணம் அமையும். திட்டமிட்ட காரியங்களில் வெற்றி.

**கும்பம்** தடைபட்டாலும் கேட்ட உதவிகள் கிடைக்கும். தொழில் முயற்சிகளில் வெற்றி கிட்டும். புண்ணிய காரிய ஈடுபாடு.

**மீனம்** வீண் மனப்பயத்தினால் உடல் நோய்கள் ஏற்படும். மறைமுக விரோதிகளின் தொல்லை. எதற்கும் எச்சரிக்கை வேண்டும்.

**திதி:** ஏகாதசி பி.இ.12.44 வரை பின் துவாதசி
நட்சத்திரம்: சுவாதி மு.ப.6.09 வரை பின் விசாகம்
**பிறை:** தேய்பிறை
**யோகம்:** அமிர்த யோகம் மு.ப.6.09 வரை பின் சித்த யோகம்
**வார சூலை:** தெற்கு திசை நோக்கி சுப காரியம் கூடாது.
**நல்ல நேரம்:** காலை- 9.19 – 12.19 மணி வரை மாலை- 4.19 – 6.19 மணி வரை
**ராகு காலம்:** 1.49 – 3.19 மணி வரை
**எமகண்டம் :** 6.19 - 7.49 மணி வரை
**குளிகை :** 9.19 - 10.49 மணி வரை
**சந்திராஷ்டமம்:** மீன ராசியினர் எச்சரிக்கையாக செயற்படவும்.

**அதிர்ஷ்ட தாராபலனுடைய நட்சத்திரங்கள்**

**இன்று முன்னிரவு 6.09 மணி வரை**
அஸ்வினி, கார்த்திகை, மிருகசீரிடம், புனர்பூசம், பூசம், மகம், உத்திரம், சித்திரை, விசாகம், அனுஷம், மூலம், உத்திராடம், அவிட்டம், பூரட்டாதி, உத்திரட்டாதி

**இன்று முன்னிரவு 6.09 மணிக்கு மேல்**
பரணி, ரோஹிணி, திருவாதிரை, பூசம், ஆயிலியம், பூரம், அஸ்தம், சுவாதி, அனுஷம், கேட்டை, பூராடம், திருவோணம், சதயம், உத்திரட்டாதி, ரேவதி

**போன்ற நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு, தொழில், வியாபார இலாபங்கள்,கல்விச் சிறப்பு, திடீர் தன அதிர்ஷ்டம், உடல் ஆரோக்கியம், தெய்வ அனுக்கிரகம் அனைத்தும் சித்திக்கும்.**

**விஷேட தினம்:** ஏகாதசி விரதம்

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**



(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்) ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி :
077-0525325
078-6759739

# வடக்கு மக்கள் விடுவிக்கக் கோருவது இராணுவத்தினரின் காணிகளை அல்ல

## மக்கள் காணிகளையே என வட மாகாண ஆளுநர் தெரிவிப்பு

**பு.கஜிந்தன்**

இராணுவத்தினரின் காணிகளை வடக்கு மக்கள் விடுவிக்கக் கோரவில்லை. அவர்களின் சொந்தக் காணிகளையே விடுவிக்கக் கோருகின்றார்கள் என்ற தெளிவுபடுத்தலை தென்னிலங்கை மக்களுக்கு எடுத்துச் சொல்லுமாறு என்னைச் சந்தித்த தென்னிலங்கையைச் சேர்ந்த சிவில் சமூகக் குழுக்களிடம் தெரிவித்துள்ளேன் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

வயாவிளான், பலாலி தெற்கு, பலாலி கிழக்கு மக்களின் அழைப்பின் பேரில் வடக்கு மாகாண ஆளுநர் தலைமையில் விடுவிக்கப்பட்ட காணிகளில் விவசாய நடவடிக்கை மேற்கொள்ளல் தொடர்பான கலந்துரையாடலும், பூனையன்காடு இந்து மயானத்தில் மர நடுகையும் நேற்றுக் காலை (25) வயாவிளானில் நடைபெற்றது.

இங்கு உரையாற்றிய வடக்கு ஆளுநர், 2015ஆம் ஆண்டு காலத்தில் யாழ். மாவட்டச் செயலராக நான் இருந்தபோது படிப்படியாக பல பிரதேசங்கள் விடுவிக்கப்பட்டன. விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் மக்கள் குடியமரவில்லை என பாதுகாப்புத் தரப்பினர் எங்களுக்கு திரும்பத் திரும்ப சொல்லிக்கொண்டிருந்தனர். அந்த நேரத்தில் வீட்டுத் திட்டங்களை நாம் நடைமுறைப்படுத்தினோம். மக்களும் எதிர்பார்த்ததைப் போன்று மீள் குடியமர்ந்தார்கள்.



2018ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் ஏற்பட்ட அரசியல் குழப்பத்தை தொடர்ந்து காணி விடுவிப்புக்கள் நடைபெறவில்லை. இந்த ஆண்டு சிறிய அளவில் காணிகள் விடுவிக்கப்பட்டிருக்கின்றன. விடுவிக்கப்பட்ட காணிகளை விவசாய பூமியாக மாற்றுவதுதான் நீங்கள் எங்களுக்குச் செய்யும் உதவி.

இடம்பெயர்ந்தவர்களின் வலி எனக்கும் தெரியும். நானும் இடம்பெயர்ந்த ஒருவன்தான். தற்போது யாழ். மாவட்ட இராணுவத் தளபதியாக நியமிக்கப்பட்டுள்ள யஹம்பத் நேர் சிந்தனை உடைய ஒருவர். எனவே இந்த அரசாங்கத்தின் காலத்தில் படிப்படியாக காணிகளை விடுவிக்க முடியும் என நம்புகின்றோம்.

இங்கு காணிகள், வீதிகள் விடுவிக்கப்பட்டதும் தென்னிலங்கையிலிருந்து சில தேவையற்ற கருத்துக்கள் வெளியிடப்பட்டு அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுகின்றன. தென்னிலங்கை மக்களுக்கு இங்கு நடைபெறுவது என்ன என்ற உண்மையை தெளிவுபடுத்துமாறு என்னைச் சந்தித்த தென்னிலங்கையைச் சேர்ந்த சிவில் சமூகக் குழுக்களிடம் தெரிவித்திருக்கின்றேன்.

வடக்கு மக்கள் எல்லோருக்கும் எதிர்பார்ப்பு இருக்கின்றது என்பது எனக்குத் தெரியும். விரைவில் சாதகமான விடயங்கள் நடக்கும் என நம்புகின்றேன் என்று ஆளுநர் தெரிவித்தார்.

இதன் பின்னர் அந்தப் பிரதேசத்தில் வடக்கு ஆளுநரால் மரக்கன்றுகள் நடுகை செய்யப்பட்டன.

இந்நிகழ்வில் தெல்லிப்பழை பிரதேச செயலர், வலி. வடக்கு பிரதேச சபை செயலர், தெல்லிப்பழை பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர், வலி. வடக்கு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் ஆகியோர் பங்கேற்றனர்.

இந்த நிகழ்வை வயாவிளான் மீள் எழுச்சிக்கான உதவும்கரங்கள் மற்றும் பூனையன்காடு இந்து மயான அபிவிருத்திச் சபை என்பன ஒழுங்குபடுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.



தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91. விஜேராம மாவத்தை. கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2024 டிசம்பர் 26ஆம் திகதி, வியாழக்கிழமை

# ஆழிப்பேரலை கால ஊழல்களை ஆராய்க!

2004 டிசம்பர் 26 ஆம் திகதி உலக வரலாற்றில் மறக்கமுடியாத ஒரு கறுப்பு தினமாக பதிவாகிய சுனாமி ஆழிப்பேரலை ஏற்பட்டு இன்றுடன் 20 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன.

இந்தோனேஷியாவின் சுமத்திரா தீவில் ஏற்பட்ட நில அதிர்வு காரணமாக இந்து சமுத்திரத்தில் ஏற்பட்ட ஆழிப்பேரலை ஆசிய நாடுகளில் வரலாறு காணாத அழிவை ஏற்படுத்தியது.ரிச்டர் அளவுகோளில் 9.1 முதல் 9.3 மெக்னிடீயூட்டாக அந்த நில அதிர்வு பதிவாகியிருந்தது. இதன் காரணமாக இந்து சமுத்திர பிராந்தியத்தில் சுமார் 100 அடி உயரத்துக்கு ஆழிப்பேரலை உருவாகியது.

இலங்கை, இந்தியா, மலேசியா, மியன்மார், அந்தமான் மற்றும் தாய்லாந்து உள்ளிட்ட 14 ஆசிய நாடுகளின் கரையோரங்களை இந்த ஆழிப்பேரலை சூறையாடிச் சென்றது. ஆசிய நாடுகளில் 2 இலட்சத்து 27 ஆயிரத்து 898 உயிர்களை இந்த ஆழிப்பேரலை காவுகொண்டது. அத்துடன், பல்லாயிரக்கணக்கான மக்களை நிர்க்கதியாக்கியது.

இந்து சமுத்திர நாடுகளில் 15 பில்லியன் டொலர்கள் பெறுமதியான சொத்துகள், உடைமைகள் சேதமாகின.இந்த ஆழிப்பேரலையின் கோரத் தாண்டவத்தால் 35 ஆயிரத்துக்கும் மேற்பட்ட உயிர்கள் இலங்கையிலும் காவுகொள்ளப்பட்டன. 21 ஆயிரத்து 411 பேர் காயமடைந்தனர். ஐந்து இலட்சத்துக்கும் அதிகமான பொதுமக்கள் நிர்க்கதியாகினர்.

அதுமட்டுமன்றி சொத்துகள், உடைமைகள் சேதமடைந்தமையினால் கல்வி, போக்குவரத்து, சுகாதாரம் உள்ளிட்ட பல்வேறு துறைகளும் பெரும் பாதிப்படைந்தன. ஆழிப்பேரலை என்ற சொல்லையும் அதன் தாக்கத்தையும் 2004 ஆம் ஆண்டுவரை அறிந்திருக்காத மக்கள், கடலில் திடீரென ஏற்பட்ட ஆழிப்பேரலையை ஆச்சரியத்துடன் பார்க்கச் சென்றனர்.இதன் காரணமாகவே பல்லாயிரக்கணக்கான உயிர்கள் கடல் கோளுக்கு இரையாகின. இதன் பின்னர் சுனாமி என்னும் ஆழிப்பேரலை தொடர்பான அச்சமும் அது தொடர்பான விழிப்புணர்வும் உலக மக்களிடம் ஏற்படத் தொடங்கின. இன்றைய நிலையில் ஆழிப்பேரலை அனர்த்தத்தை முன்கூட்டியே கண்டறிவதற்காக பல்வேறு உலக நாடுகளில் கண்காணிப்பு மையங்கள் நிறுவப்பட்டு சமுத்திரப்பரப்பும் அதில் ஏற்படும் மாற்றங்கள் குறித்தும் அவதானிக்கப்பட்டுவருகின்றன.

சுனாமி எனப்படும் ஆழிப்பேரலையால் காவுகொள்ளப்பட்ட உயிர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் மாதம் 26ஆம் திகதி உலக மக்களால் அஞ்சலி செலுத்தப்பட்டு வருகின்றது.உலக வரலாற்றில் ஒரு கறுப்பு அத்தியாயத்தை எழுதிய ஆழிப்பேரலை ஏற்பட்டு 20 ஆண்டுகள் உருண்டோடியுள்ளபோதும், அது ஏற்படுத்திய வடுக்கள் இன்றும் எம் நெஞ்சைவிட்டு நீங்காமலேயே உள்ளன.

கடும் சீற்றத்துடன் கரையைத் தொட்ட சுனாமிப் பேரலைகள் ஆயிரக்கணக்கான உயிர்களைக் காவு கொண்டன. பல குடும்பங்களை சீர்குலைத்தது. சமூகக் கட்டமைப்புகளைத் துடைத்தெறிந்தது. பல கட்டிடங்களைத் தரை மட்டமாக்கியது. பல கிராமங்களையும் நகரங்களையும் அழித்தது. இந்த நாட்டின் வரலாற்றில் இதற்கு முன் கண்டிராத அழிவை அது ஏற்படுத்தியது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தனிநபர்களும் சிவில் சமூக அமைப்புகளும் தங்களால் ஆன உதவிகளை வாரி வழங்கின. பாதிக்கப்பட்ட மக்கள் மத்தியில் தேய்ந்துபோன நம்பிக்கையை அவர்கள் மீளக் கட்டி எழுப்பினர். கருணையும் இரக்கமும் மக்கள் மத்தியில் இன்னும் குறைந்து விடவில்லை என்பதை அவர்கள் ஒட்டு மொத்தமாக வெளிப்படுத்தினர். ஆனால் அரசியல்வாதிகளோ இதற்கு முற்றிலும் மாறாக இந்த அழிவையும் அரசியலாக்கி மக்களை கூறுபோட்டனர். யுத்தத்தால் பாதிக்கப்பட்டு பிளவு பட்டிருந்த சமூகங்களை சுனாமி ஒன்றிணைத்த போதிலும் அது ஒரு குறுகிய கால கனவாகவே அமந்தது. சுனாமி ஏற்பட்டு ஒரு வருடத்துக்கு முன்பே மீண்டும் மோதல்கள் தலைதூக்கின. ஆரம்ப மதிப்பீடுகள் சிலவற்றின் படி ஒட்டு மொத்த சேதம் 1தசம் 5 பில்லியன் டொலர்கள் எனக் குறிப்பிடப்பட்டது. அதேபோல் பில்லியன் கணக்கான டொலர்கள் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிகளாகவும் நிவாரணங்களாகவும் நாட்டுக்குள் வந்ததாகவும் அறிக்கைகள் உள்ளன.

உதவிக்காகக் காத்திருந்த மக்கள் தமக்கு எதுவுமே கிடைக்கவில்லை என்றும் வந்த பணம் எல்லாம் மாயமாக மறைந்து போய்விட்டன என்றும் குற்றச்சாட்டுக்களை முன்வைத்தனர். அவர்கள் தற்காலிக பலகைக் கொட்டில்களில் வசித்து வந்தனர். நாட்டுக்குள் வந்த பணம் அரச நிறுவனங்களில் மட்டும் வைப்பில் இடப்படவில்லை. மாறாக அவை தனிநபர் கணக்குகளிலும் கம்பனிகள் மற்றும் தர்ம ஸ்தாபனங்களின் கணக்குகளிலும் வைப்பில் இடப்பட்டதாகவும் பல தகவல்கள் வெளியாகின.

ஊழல் எதிர்ப்பு சம்பந்தமாகப் பணியாற்றும் ஒரு அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ருக்ஷானா நாணயக்கார அப்போது குறிப்பிடுகையில் “பணத்துக்கு என்ன நடந்தது என்பதை கண்டு பிடிப்பது மிகவும் கஷ்டமானது. ஆரம்ப கட்ட அரச கணக்காய்வு ஒன்றின் படி புனர்நிர்மாணப் பணிகளின் முதலாவது ஆண்டில் மொத்த உதவியில் 13 வீதம் மட்டுமே செலவிடப்பட்டுள்ளது. ஆனால் அதற்குப் பிறகு இது சம்பந்தமான எந்த ஒரு கணக்கும் முறையாக ஆய்வு செய்யப்படவில்லை” என்று தெரிவித்திருந்தார்.

சுனாமியால் பாதிக்கப்பட்டவர்கள் மிக மோசமான நிலைமையில் வாடுகின்ற போது, அவர்கள் தற்காலிக கொட்டில்களில் காலத்தைக் கழித்துக் கொண்டிருந்த போது தான் அவர்களுக்கு கிடைத்த நிவாரண உதவிகளிலும் ஊழல் இடம்பெற்றுள்ளது என்ற அறிக்கைகள் அடுத்தடுத்து வெளிவரத் தொடங்கின. ஒரு மனிதப் பேரவலத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் பிரிவுக்கு கிடைத்த உதவிகளைக் கூட சூறையாடி உள்ளார்கள் என்றால் அவர்கள் எந்தளவு மனிதாபிமானம் அற்றவர்களாக இருக்க வேண்டும்.

அன்றைய கணக்காய்வாளர் நாயகம் எஸ்.சி. மாயதுன்னே வெளியிட்ட ஒரு அறிக்கையின் படி “அரச அதிகாரிகள் ஆயிரக்கணக்கான டொலர்களை மோசடி செய்துள்ளனர். அவர்களுக்கு வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களை மீறி இந்த மோசடிகள் இடம்பெற்றுள்ளன. ஆயிரக்கணக்கான குடும்பங்களுக்கு அதிகாரிகள் மில்லியன் கணக்கான ரூபாய்களை நிவாரணமாகப் பகிர்ந்தளித்தனர். ஆனால் அவர்களுள் அநேகமானவர்கள் சுனாமியால் எந்தப் பாதிப்பையும் சந்திக்காதவர்கள். அதேவேளை உண்மையான பாதிப்புக்குள்ளாகி இடம்பெயர்ந்த பல குடும்பங்களுக்கு முறைப்படி கிடைக்க வேண்டிய அத்தியாவசிய உலர் உணவுப் பொருள் நிவாரணங்கள் கூட கிடைக்கவில்லை” என்று தெரிவித் திருந்ததை இங்கு சுட்டிக்காட்ட வேண்டும்.

இலங்கைக்கு வெளிநாட்டு உதவி உத்தரவாதமாக 3 தசம் 2 பில்லியன் டொலர்கள் கிடைத்ததாக இன்னும் சில தகவல்களில் தெரிவிக்கப்பட்டுள்ளன. கணக்குகள் சரியாகப் பேணப்படாத நிலையில் கிடைத்த பணத்துக்கு என்ன நடந்தது என்பதைக் கண்டு பிடிக்கக்கூட முடியாத நிலை இருந்தது. உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்ட தரவுகள் கூட அவ்வப்போது முரண்பட்டன. சுமார் ஒரு இலட்சம் வீடுகள் பாதிக்கப்பட்டதாக அல்லது முற்றாக அழிந்து போனதாக தகவல்கள் உள்ளன. ஆனால் சுனாமியின் இரண்டாம் ஆண்டு நிறைவின் போது இவற்றில் அரைவாசி மட்டுமே ஒன்றில் திருத்தி அமைக்கப்பட்டன அல்லது கட்டி முடிக்கப்பட்டன.

பாரிய அளவிலான வீண் செலவுகள் மற்றும் மோசடிகள் இடம்பெற்றுள்ளதாக ஆதாரபூர்வமான தகவல்கள் இருந்தும் கூட அரசாங்கம் சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக கடந்த ஆட்சிக்காலத்தில் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அரசியல்வாதிகள் அதிகாரிகளோடு இணைந்து சதி செய்து தமது ஆதரவாளர்களைக் காப்பாற்றி குற்றங்களை மூடி மறைத்தனர். இதனை தமது சுய நலன்களுக்காகவே அவர்கள் செய்தனர். வஞ்சகமான முறையில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் ஏனைய செயற்பாடுகள் மூலம் அரசியல்வாதிகள் நன்மைகளை அடைந்து கொண்டனர். இது உதவிகள் வழங்கல், நிவாரணங்கள் வழங்கல் அதற்கான வாகனங்களை ஒப்பந்தம் செய்தல் என எல்லா வழிகளிலும் தொடர்ந்தது. ஜனாதிபதி அநுரகுமார இப்போது எடுத்திருக்கும் முக்கியமான நிலைப்பாடு ஊழல் மோசடியாளர்களை வெளியே கொணர்வது. அந்த வகையில் ஆழிப்பேரலையில் நிதி மோசடிகளை செய்தோர், ஊழல் புரிந்தவர்களை கண்டறியவும் அவர் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்காக விசேட ஆணைக்குழுவை நியமிக்க வேண்டும். சுனாமி நினைவு நாளில் அதனை வலியுறுத்துவது பாதிக்கப்பட்ட மக்கள் சார்பான எமது கடமையும் பொறுப்புமாகும்.

# சுனாமியில் மீண்ட ‘பேபி 81’

## இளைஞராக இப்போது என்ன சொல்கிறார்?









சுனாமியில் சிக்கி உயிருடன் மீட்கப்பட்ட 2 மாதக் குழந்தையான ‘சுனாமி குழந்தை 81’, தற்போது 20 வயது இளைஞனாக உயர்கல்விக் கனவுடன் காத்திருக்கிறார்.

இலங்கையில் 35 ஆயிரம் பேரை பலிகொண்ட சுனாமிக்கு 2 மாதக் குழந்தை எம்மாத்திரம்? ஆனால், அவ்வளவு பெரிய ஆழிப்பேரலையில் அபிலாஷ் என்ற 2 மாதக் குழந்தை சிக்கி உயிருடன் மீண்டது. இது நவீன கால இயற்கைப் பேரிடர் வரலாற்றின் அதிசயம் என்றும் கூறலாம்.

இந்தியப் பெருங்கடலில் கடந்த 2004ஆம் ஆண்டு ஏற்பட்ட நிலநடுக்கமும் அதனைத் தொடர்ந்து நேரிட்ட சுனாமி எனப்படும் ஆழிப்பேரலையும் இந்தியா, இலங்கை என பல உலக நாடுகளைப் புரட்டிப்போட்டுவிட்டுச் சென்றன.

அப்போது நடந்த நிகழ்வுகளும் ஊடகங்கள் வாயிலாகப் பார்த்த காட்சிகளும் யாரெவருக்கும் அவரது நினைவிலிருந்து அகலவே அகலாது.

அதுபோலவே, சுனாமி தொடர்பான தகவல்களில் ஒன்றாக ‘சுனாமி குழந்தை 81’ பற்றிய தகவல்களும் வெளியாகியிருந்தன.

அதாவது, இலங்கையை சுனாமி ஆழிப்பேரலைகள் தாக்கி ஆயிரக்கணக்கானோரை கடலுக்குள் இழுத்துச் சென்று பிறகு பிணங்களாக வீசிச் சென்றிருந்தன. ஆனால், இழுத்துச் சென்ற இடத்திலேயே அல்ல. இந்தப் பேரழிவின்போது அதாவது, 2004ஆம் ஆண்டு டிசம்பர் 26ஆம் திகதி இலங்கையின் அம்பாறை மாவட்டம், கல்முனை கடற்கரையோரத்தில் தேங்கிய ஏராளமான கழிவுகளுக்கிடையே ஒரு குழந்தையின் அழுகுரல். பிறந்து 2 மாதங்களே ஆன குழந்தை அது.

மீட்புப் படையினர் குழந்தையை மீட்டு மருத்துவமனையில் அனுமதித்தனர். அப்போது குழந்தையை சொந்தம் கொண்டாட யாருமில்லை. அந்த மருத்துவமனையில் சுனாமியில் சிக்கி மீட்கப்பட்ட 81ஆவது நபராக (குழந்தையாக) வந்தது இந்தக் குழந்தை என்பதால், மருத்துவமனை முழுக்க ‘குழந்தை 81’ என்று அடையாளம் சொல்லப்பட்டது.

பல நாட்கள் யாரும் குழந்தையைத் தேடி வராத நிலையில்தான், ஒரே நேரத்தில் ஒன்பது தம்பதியர், அது தங்கள் குழந்தை எனச் சொந்தம் கொண்டாடினர். இதனால் தொடர்ந்து குழந்தை மருத்துவமனையிலேயே இருக்க நேரிட்டது.

பிறகு, ஜெயராஜா குடும்பத்தினர், அது தங்கள் குழந்தை அபிலாஷ் என சொந்தம் கொண்டாடியதோடு, நீதிமன்றம் சென்று மரபணு சோதனை நடத்தி, தங்கள் குழந்தை என்பதை உறுதி செய்து நீதிமன்ற உத்தரவைத் தொடர்ந்து 2005ஆம் ஆண்டு பெப்ரவரி 16ஆம் திகதி குழந்தை ஜெயராஜா குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டது.

பிறகுதான் அவர்களுக்கு வேறொரு சிக்கல் ஏற்பட்டது. ஊடகங்கள் வாயிலாக அவர்களைப் பற்றித் தெரிந்துகொண்ட மக்கள் பலரும், அவர்கள் எங்கு சென்றாலும் ‘சுனாமி குடும்பம்’ என்றும், ‘குழந்தை 81’ என்று அபிலாஷும், பாடசாலையில் பிள்ளைகளால் ‘சுனாமி பேபி’ என்றும் அழைக்கப்பட்டது.

சுனாமி குறித்து ஜெயராசா கூறுகையில், ‘‘சுனாமியில் குடும்பத்துடன் சிக்கிக்கொண்டோம். மூன்று நாட்களாக குடும்பத்தினரைத் தேடிக்கொண்டிருந்தேன். முதலில் எனது தாயைக் கண்டுபிடித்தேன். பிறகு மனைவி இருக்குமிடம் தெரிந்தது. ஆனால், மகன் மருத்துவமனையில் இருக்கிறான் என்று தகவல் கிடைத்ததும் ஓடோடிச் சென்றால் அங்கு குழந்தை இல்லை. யாரும் சொந்தம் கொண்டாடாததால், மருத்துவமனைத் தாதி ஒருவர் குழந்தையை எடுத்துச் செல்ல பெற்றோர் தேடி வந்திருப்பதாகத் தகவல் கிடைத்ததும் குழந்தை மீண்டும் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டதாகக் கூறுகிறார்கள்.



எங்கள் குழந்தை என்று சொந்தம் கொண்டாடிய அனைவரையும் மரபணு சோதனை நடத்த நீதிமன்றம் உத்தரவிட்டது. ஆனால், யாரும் முன்வரவில்லை. நாங்கள் சோதனை செய்து எங்கள் குழந்தையை திரும்பப் பெற்றோம்’’- என்கிறார் ஜெயராசா. எங்கள் கதை உலகம் முழுவதும் பரவியதால் அமெரிக்க ஊடகத்திலிருந்து கூட நேர்காணல்கள் நடத்தப்பட்டதாகவும் அவர் கூறியிருந்தார்.

தற்போது அபிலாஷ் கூறுகையில், ‘‘பெற்றோர் மூலம் என்ன நடந்தது என்று சொல்லக் கேட்டிருக்கிறேன். ஆனால், அது என்ன அவ்வளவு பெரிய விஷயமா என்றுதான் நினைப்பேன். ஆனால், இப்போது ஓரளவுக்கு எல்லாம் புரியத் தொடங்கியபோதுதான் நாம் எவ்வளவு பெரிய ஆபத்திலிருந்து உயிரோடு மீண்டிருக்கிறோம் என்பது புரிகிறது’’- என்கிறார்.

நன்றி:- இணையம்

# இன்றைய நாளில்...

- 1862– ஐக்கிய அமெரிக்காவின் மினசோட்டாவில் 39 அமெரிக்கப் பழங்குடியினர் தூக்கிலிடப்பட்டனர்.
- 1870– ஆல்ப்ஸ் மலைத்தொடரூடான 12.8 கி.மீ. நீள ரயில் சுரங்கப்பாதை அமைக்கப்பட்டது.
- 1882 – யாழ்ப்பாணம், மன்னார் உட்பட இலங்கையின் பல இடங்களிலும் பலத்த மழையுடன் சூறாவளி பெரும் சேதத்தை ஏற்படுத்தியது.
- 1896 – சிலாபம் கலவரம்: இலங்கை, சிலாபம் நகரில் சோனகர்களுக்கும் கத்தோலிக்க சிங்களவர்களுக்குமிடையில் கலவரம் வெடித்தது.
- 1898 – மேரி கியூரி, பியேர் கியூரி ஆகியோர் ரேடியத்தை தாம் கண்டுபிடித்ததாக அறிவித்தனர்.
- 1925 – இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஆரம்பிக்கப்பட்டது.
- 1925 – துருக்கி கிரிகோரியன் நாட்காட்டிக்கு மாறியது.
- 1944 – ஆங் சான் பர்மாவின் நவீன இராணுவத்தை உருவாக்கினார்.
- 1973 – சோவியத்தின் சோயூஸ் 13 விண்கலம் ஒரு வார பயணத்தின் பின்னர் பூமிக்கு திரும்பியது.
- 1974– சோவியத்தின் சல்யூட் 4 விண்கலம் விண்ணுக்கு அனுப்பப்பட்டது.
- 1975– உலகின் முதலாவது வணிக நோக்கு சுப்பர்சோனிக் வானூர்தி துப்போலெவ் டி.யூ-144 சேவைக்கு விடப்பட்டது.
- 1976 – நேபாள கம்யூனிஸ்ட் கட்சி (மாவோயிஸ்ட்) அமைக்கப்பட்டது.
- 2004 – வடக்கு சுமத்திராவை நிலநடுக்கம் தாக்கியதைத் தொடர்ந்து தாய்லாந்து, இந்தியா, இலங்கை, மாலைதீவுகள், மலேஷியா, மியன்மார், பங்களாதேஷ், இந்தோனேஷியா ஆகிய நாடுகளில் ஏற்பட்ட ஆழிப்பேரலையால் 3,00,000 பேர் வரை இறந்தனர்.
- 2006 – சதாம் ஹுசேனின் மேன்முறையீடு நிராகரிக்கப்பட்டு மரண தண்டனை உறுதி செய்யப்பட்டது.



# பாதுகாப்பையும் அடிப்படை வசதிகளையும் கருதியே மியன்மார் அகதிகள் முல்லைத்தீவுக்கு அனுப்பிவைப்பு

## வெளிவிவகார பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திரா

(சீனக்குடா செய்தியாளர்)



மியன்மார் அகதிகளுக்கு போதுமான அடிப்படை வசதிகளை வழங்குவதற்கும் அவர்களுக்குத் தேவையான பாதுகாப்பை அளிப்பதற்காகவுமே முல்லைத்தீவு, கேப்பாபிலவு விமானப்படைத் தளத்துக்கு அவர்கள் அழைத்துச் செல்லப்பட்டதாக வெளி விவகார மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்புகள் வெளிவிவகார பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திரா தெரிவித்தார்.

மியன்மார் அகதிகள் மீண்டும் முல்லைத்தீவு,கேப்பாபிலவு விமானப்படைத் தளத்துக்கு நேற்று முன்தினம் (24) மாலை கொண்டு செல்லப்பட்டுள்ளமை குறித்து ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

''அகதிகள் என்ற மனிதாபிமானத்தோடு மட்டுமே இவர்களைக் கையாண்டுகொண்டிருக்கிறோம். இங்கு வேறு எதனையும் நாங்கள் எடுத்துக் கொள்ளவில்லை. எனவே, இது தொடர்பாக யாரும் குழப்பமடையவோ கவலையடையவோ தேவையில்லை.

தேசிய மற்றும் சர்வதேச ரீதியான சட்ட திட்டங்களுக்கேற்ப ஒருங்கிணைப்புடன் இவர்களை நாங்கள் கையாண்டு கொண்டிருக்கின்றோம். அகதிகள் எவரும் உடல் ரீதியாகவோ உளரீதியாகவோ துன்புறுத்தல்களுக்கு ஆளாகக் கூடாது என்பதில் மிகக் கவனமாக செயற்பட்டுக்கொண்டிருக்கிறோம்.

இவர்கள் விடயம் தொடர்பாக வெளிவிவகார அமைச்சு, பொது நிர்வாக உள்நாட்டு அலுவலர்கள் அமைச்சு, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு, பாதுகாப்புத்துறை மற்றும் சுகாதாரத்துறை ஆகியன ஒன்றாக இணைந்து பணியாற்றி வருகின்றன.

மியன்மார் அகதிகள் விவகாரம் குறித்து அகதிகளை சரியாகப் பராமரிக்கவில்லையென்று ஒரு சாரார் தங்களுடைய சுய அரசியலுக்காகக் கூறுகின்றனர்.

இன்னுமொரு சாரார் அகதிகளுக்கு பிரஜா வுரிமையை பெற்றுக்கொடுக்கப்போவதாகவும் இவர்களை சமூகமயப்படுத்தப்போவதாகவும் தெரிவித்து, கருத்துகளை வெளியிடுகின்றனர்.

எனவே, அகதிகளை வைத்து இனவாதத்தை நாட்டில் மீண்டும் தோற்றுவிக்க முயற்சிக்க வேண்டாமெனவும் அதேபோன்று, அரசியலுக்காகவும் இனவாதத்தைக் கையிலெடுக்க வேண்டாமெனவும் கேட்டுக்கொள்கின்றோம்''- என்றும் பிரதி அமைச்சர் தெரிவித்தார்.



கிராண்ட்பாஸ் சுவர்ண சைத்திய வீதி மஸ்ஜிதுல் தீனுல் இஸ்லாம் பள்ளிவாசல் நிர்வாகிகள், ஊர் மக்கள் மற்றும் நலன்விரும்பிகளின் ஏற்பாட்டில் மீலாத் நபி விழா நடைபெற்றது. இந்நிகழ்வில் விசேட அதிதியாக ரஹ்மானியா ஜும்ஆப் பள்ளிவாசல் பேஷ் இமாம் அஷ்ஷெய்க் நூர் முஹம்மத் (பலாஹி) கலந்துகொண்டார். இந்நிகழ்வில் மௌலவிமார்,பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். இதன்போது போட்டிகளில் கலந்து கொண்ட மாணவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன. (படங்கள் – எம்.நசார்)



மொரட்டுவை, ராவதாவத்தை முத்துமாரி அம்மன் ஆலய பரிபாலகர் கே.விஜயந்தனின் ஏற்பாட்டில் கருமாரி ஆலய தலைவர் விஜயானந்த தலைமையில் ஐயப்ப பூஜை வழிபாடுகள் மற்றும் பஜனைகள் இடம்பெற்றன. இந்நிகழ்வில் சர்வதேச இந்து மன்ற பீட செயலாளர் கலாநிதி பாபுசர்மா குருக்கள், பிரதேச மக்கள், ஐயப்ப பக்தர்கள் என பெருமளவானோர் கலந்துகொண்டனர். பூஜைகளில் கலந்துகொண்டவர்களுக்கு அன்னதானமும் வழங்கப்பட்டது. (அஷ்ரப் ஏ. சமத்)



ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தினால் தயாரிக்கப்பட்ட மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சின் பாலினத்தினருக்கான வன்புணர்வு கொடுமைகள் பற்றிய இரண்டாவது கொள்கைத் திட்ட 2024-2028 அறிக்கையை ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்ட வதிவிடப் பிரதிநிதி அசுசா குப்தா, மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜிடம் நேற்று கையளித்தார். இந்நிகழ்வில் டாக்டர் நாமல் சுதர்சன, மகளிர், சிறுவர் விவகார பிரதியமைச்சர், அமைச்சின் செயலாளர் மற்றும் யு.என்.எவ். பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். (அஷ்ரப் ஏ. சமத்)





லிபர்ட்டி பப்ளிஷர்ஸ் ஊடக அனுசரணையில் நத்தார் தின விசேட ஆராதனை தலவில புனித அன்னம்மாள் தேவாலயத்தில் நேற்று (25) இடம்பெற்றது. (அசித் ஜயசிங்க)

## இலஞ்ச - ஊழல் ஆணைக்குழு கைதுசெய்த பொலிஸ் பரிசோதகருக்கு விளக்கமறியல்

(பதுர்தீன் சிஹான்)

திருகோணமலை தலைமையகப் பொலிஸ் நிலையத்தில் வைத்து இலஞ்ச - ஊழல்கள் ஆணைக்குழுவினால் கைதுசெய்யப்பட்ட பொலிஸ் பரிசோதகரை நாளை 27ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு திருகோணமலை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

திருகோணமலை நீதிமன்றப் பதில் நீதவான் ஏ.எஸ்.சாஹிர் முன்னிலையில் ஆஜர்படுத்தியபோது இக்கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது. திருகோணமலை தலைமையகப் பொலிஸ் நிலையத்தில் கடந்த 22ஆம் திகதி பணம் கொடுக்கல் வாங்கல் தொடர்பில் ஏற்பட்ட பிரச்சினை சம்பந்தமாக சிறு குற்றப்பிரிவில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இம்முறைப்பாட்டை விசாரணை செய்து பணத்தைப் பெற்றுத் தருவதாகக் கூறி பொலிஸ் பரிசோதகர் முறைப்பாட்டாளரிடம் ஐயாயிரம் ரூபா பணத்தை பொலிஸ் நிலைய சிற்றுண்டிச்சாலைக்கருகில் வைத்துப் பெற்றுள்ளார். இதேநேரம், இலஞ்ச - ஊழல்கள் ஆணைக் குழுவின் அதிகாரிகள் முன்னிலையில் குறித்த பொலிஸ் பரிசோதகர் கைதுசெய்யப்பட்ட நிலையில், உப்புவெளி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டதையடுத்து, திருகோணமலை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார்.

குறித்த பொலிஸ் பரிசோதகரை நாளை 27ஆம் திகதி கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துமாறும் பதில் நீதவான் ஏ.எஸ்.சாஹிர் கட்டளையிட்டார்.

# வெல்லவ மரலுவாவ பகுதியில் தம்பதியினர் மீது துப்பாக்கிச்சூடு

## கணவன் பலி – மனைவி காயம்

வெல்லவ, மரலுவாவ பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் 32 வயதுடைய நபரொருவர் உயிரிழந்துள்ளதுடன், அவரது மனைவி காயமடைந்துள்ளார்.

தம்பதியினர் தங்கள் வீட்டுக்குள் இருந்தபோது நேற்று முன்தினம் (24) இரவு இனந்தெரியாத துப்பாக்கிதாரியொருவர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்த இருவரும் குருநாகல் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில், சிகிச்சை பலனின்றி கணவன் உயிரிழந்துள்ளார். துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதற்கான காரணம் மற்றும் சந்தேகநபர் யார் என்பது இதுவரை தெரியவரவில்லை.











**ஐயப்பன் சாமிமார்கள் அனைவருக்கும் அன்பான வணக்கம்**

“கன்னிமூல கணபதி பகவானே சரணம் ஐயப்பா, காந்தமலை ஜோதியே சரணம் ஐயப்பா” என்ற கோஷத்தோடு எனது சபரிமலை பயணம் ஆரம்பித்து 34 வருட காலமாக ஐயப்ப சாமிமார்களை சபரிமலைக்கு கூட்டிச்சென்று அவர்களுக்கான பல்வேறு வழிகாட்டல்களையும் என்னால் முடிந்த அனைத்தையும் செய்துகொண்டிருக்கின்றேன்.

அந்த வகையில், கொழும்பு -11, செட்டியார் தெருவில் அமையப்பெற்றுள்ள நாட்டுக்கோட்டை நகரத்தார் புதிய கதிர்வேலாயுத சுவாமி ஆலயத்தில் கடந்த 25 வருட காலமாக பூஜைகள் செய்துகொண்டிருக்கின்றோம். இத்தருணத்தில், எமக்கான இந்த இடத்தைத் தந்த ஆலய தர்மகர்த்தா ராஜேந்திரன் செட்டியார் ஐயா அவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைப் பகிர்ந்துகொள்வதோடு, இந்தப் புனித சபரிமலை யாத்திரையில் என்னோடு மற்றுமொரு குரு சாமியாக கருப்பையா குருசாமியும் இணைந்து இந்தப் புனித பயணத்தை மேற்கொண்டிருக்கின்றார். இலங்கையைப் பொறுத்தமட்டில் ஐயப்ப வழிபாடென்பது ஒரு முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகின்றது. வருடா வருடம் இலட்சக்கணக்கான ஐயப்ப பக்தர்கள் ஐயனை காணச்சென்று தரிசித்துக்கொண்டிருக்கின்றார்கள். இவ்வாறான நிலையில், நான் கடந்த 25 வருட காலமாக இந்த ஆலயத்தில் ஐயப்ப பூஜைகளை சாமிமார்களின் ஒத்துழைப்போடு மிகச்சிறப்பான முறையில் செய்துகொண்டிருக்கிறேன் என்பது அந்த ஐயன் எனக்கு கொடுத்த ஒரு கொடை என்பதை இவ்விடத்தில் பதிவு செய்துகொள்கின்றேன். விரத மாலை அணிந்து செல்லக்கூடிய ஒவ்வொரு சாமிமார்களின் நம்பிக்கையும் வருடா வருடம் அதிகரித்துக்கொண்டிருக்கின்றது. எனவே, இவ்வாறான தருணத்தில் நம் நாட்டிலுள்ள அனைவருக்கும் சுபீட்சம் நிறைவுறவும் சந்தோஷமாக வாழவும் எல்லாம் வல்ல சபரி ஐயப்பன் சகல சௌபாக்கியங்களையும் கொடுக்க வேண்டுமென பிரார்த்தித்துக்கொள்கின்றேன்.

ஆர். ராஜேந்திரன் குருசாமி
கொழும்பு -11, செட்டியார் தெரு
நாட்டுக்கோட்டை நகரத்தாரின்
புதிய கதிர்வேலாயுத சுவாமி
ஆலய அகில இலங்கை சபரி
தீர்த்த யாத்திரைக் குழு.

# ஓம் கன்னிமூல கணபதி பகவானே சரணம் ஐயப்பா

New Saraswathi Cafe
GradeA-Food Safety Execellence Award in 2016
No: 230, Sea Street, Colombo-11.Sri lanka, TEL: 0112435789 www.nsc230.lk

ROOP KALAA
DESIGNER WEAR BRIDAL SAREES
The Exclusive Bridal Boutique
No.109, Main Street, Colombo-11.
Tel : 011 2325125
Mob: 077 8499390
Email : roopkalaa@gmail.com

SSH
SRI SURYAS HOTEL
Pure Vegetarian Air Conditioner Restaurant
No: 255, Sea Street, Colombo-11 TEL: 2424789 Fax: 24241789 E-mail:srisuryasa208@gmail.com

Nelco Steels
CENERAL HARDWARE MARCHANTS, SUPPLIER AND IMPORTERS
NO 27, QUARRY ROAD, COLOMBO -12 SRI LANKA/ E-mail: nelcosteel@gmail.com
Tel: 011 2333414 - Mobile: 077 3884517, 0771992763

KT Kishore Traders
importers,General paper Merchants and Stationary items
Shop: No:17,Mayuri Lane,colombo-11
2320105
2451078
Stores: 17/17,Negombo Road, Wattala
2949802
Kishore traders10gmail.com

Narmatha Jewellers
Dealers in 22 carat Genuine Gold Jewellery
நர்மதா ஜுவலர்ஸ் නර්මතා ජුවලර්ස්
No: 132, Sea Street, Colombo-11. TEL: 077 990 1691, 077 576 3575, 011 243 9290

**அகில இலங்கை சபரி தீர்த்த யாத்திரைக் குழு வழங்கும் மகர ஜோதி மண்டல பூஜை நிகழ்வுகள் மகா மண்டல பூஜை 26-12-2024**

# பேத்தாழை இறங்குதுறை பகுதியில் காணி அபகரிப்பு: வாழ்வாதாரம் பாதிப்புறுவதாக மீனவர்கள் சாடல்

## நடவடிக்கை எடுப்பதாக சாணக்கியன் எம்.பி.தெரிவிப்பு





(வாழைச்சேனை மேலதிக செய்தியாளர்)

வாழைச்சேனை, பேத்தாழை துறைமுக இறங்குதுறை பகுதியில் இடம்பெறும் சட்டவிரோத காணி அபகரிப்பால் தங்களது வாழ்வாதாரம் பாதிப்புறுவதாகத் தெரிவித்து பிரதேச மீனவ அமைப்பினர் மட்டக்களப்பு மாவட்ட தமிழரசுக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியனின் கவனத்துக்கு கொண்டு வந்தனர். இதனையடுத்து, நிலைமைகளை ஆராய்வதற்காக செவ்வாய்க்கிழமை (24) அப்பகுதிக்கு கள விஜயமொன்றை சாணக்கியன் எம்.பி.மேற்கொண்டிருந்தார்.

துறைமுகப் பகுதியின் அருகாமையிலுள்ள ஆற்றங்கரையோர அரச காணியொன்றை மீனவர்கள் தங்களது நாளாந்த போக்குவரத்துக்கும் மீன்பிடி நடவடிக்கைகளுக்கும் படகு நிறுத்தும் செயற்பாட்டுக்கும் நீண்டகாலமாகப் பயன்படுத்தி வந்துள்ளனர். தற்போது அதற்கு இடையூறு விளைவிக்கும் வகையில் முன்னாள் இராஜாங்க அமைச்சரின் சகோதரர்களில் ஒருவர் ஆற்றோடு சேர்த்து வேலி இட்டு காணியை அபகரித்துள்ளதுடன் அக்காணியூடாக செல்வதற்கும் தடைவிதிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் குறித்த காணியின் வேலிகளை அகற்றித் தருமாறு மீனவ அமைப்பினர் பாராளுமன்ற உறுப்பினரின் கவனத்துக்கு கொண்டு வந்தனர்.

சம்பவத்தைக் கேட்டறிந்துகொண்ட பாராளுமன்ற உறுப்பினர் இவ்வாறான செயற்பாட்டுக்கு தாம் இடமளிக்கப்போவதில்லை. அதேவேளை, ஆற்றங்கரையோடு உள்ள காணிகளின் குறிப்பிட்டளவு பிரதேசம் அரசுக்குச் சொந்தமானதாகும். அவற்றைத் தனியார் அபகரித்து வேலியிடவோ மதில் கட்டவோ முடியாது. எனவே இவ்விடயம் குறித்து எதிர்வரும் 30ஆம் திகதி நடைபெறவுள்ள மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் எடுத்துரைத்து இதற்கான தீர்வைப் பெற்றுத் தருவதாக மீனவ அமைப்பு பிரதிநிதிகளிடம் அவர் தெரிவித்துச் சென்றார்.

இவ்வாறு கலந்துரையாடல் இடம்பெற்றுச் சென்ற வேளை முன்னாள் அரசியல்வாதியின் சகோதரரின் அடியாட்களுக்கும் மீனவர் சிலருக்குமிடையில் முறுகல் நிலை ஏற்பட்டது.

இதேவேளை, கடந்த வாரமளவில் குறித்த காணிப் பிணக்கு தொடர்பாக கரையோரம் பேணல் திணைக்களத்துக்கு முறைப்பாடு தெரிவித்ததையடுத்து அவர்கள் சம்பவ இடத்துக்குச் சென்று நிலைமைகளை அவதானித்ததன் பின்னர் கரையோரத்தில் அடைக்கப்பட்ட கட்டைகள் சிலவற்றை உரியவர் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக தங்களிடம் தெரிவித்ததாகவும் ஆனால், அதற்கான நடவடிக்கைகள் இதுவரை எடுக்கப்படாத நிலை காணப்படுவதாகவும் மீனவ அமைப்பினர் தெரிவித்தனர்.

இதேவேளை, தங்களது காணியின் கட்டைகள் சிலவற்றை மீனவர்கள் சிலர் இரவோடு இரவாக அகற்றியதாக முன்னாள் இராஜாங்க அமைச்சரின் சகோதரர் குற்றஞ்சுமத்தி அவர்களுக்கெதிரான முறைப்பாட்டை கல்குடா பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்துள்ளார். அது தொடர்பான விசாரணையை பொலிஸார் முன்னெடுத்தபோது தாம் செய்யாத குற்றச் செயலைச் செய்ததாகத் தங்கள் மீது வீண் பழி சுமத்துவதாக மீனவர்கள் கவலை தெரிவிக்கின்றனர். இதேவேளை, இக்காணிப் பிணக்கை கரையோரல் பேணல் திணைக்களமே மேற்கொள்ள முடியுமெனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# சந்தேக நபரை அடையாளம் காண உதவுமாறு பொலிஸார் கோரிக்கை



(பாறுக் ஷிஹான்)

திருட்டுச் சம்பவங்கள் பலவற்றுடன் தொடர்புடையவராகக் குறிப்பிடப்படும் சந்தேக நபரை அடையாளம் காண உதவுமாறு பொதுமக்களை சம்மாந்துறை பொலிஸார் கேட்டுள்ளனர்.

சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் அண்மைக்காலமாக மோட்டார் சைக்கிள்கள் திருடப்பட்டிருந்தன. இந்நிலையில், குறித்த திருட்டுச்சம்பவங்கள் தொடர்பில் புலன் விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு பிரதான சந்தேக நபரை இனங்கண்டிருந்தனர்.

அத்துடன், பல்வேறு திருட்டுச் சம்பவம் மற்றும் கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடைய குறித்த சந்தேக நபர் பற்றிய தகவல் தெரிந்தால் சம்மாந்துறை பொலிஸ் நிலையத்துக்கு தகவல் வழங்குமாறும் குறித்த விடயம் தொடர்பில் தகவல் தருபவரின் இரகசியம் பாதுகாக்கப்படுமெனவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

மேலும், சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தின் 0672 260 222 என்ற தொலைபேசி எண்ணைத் தொடர்பு கொண்டு குறித்த சந்தேக நபர் பற்றிய தகவலை அறிவிக்குமாறும் கேட்டுள்ளனர்.

# மட்டக்களப்பு சிறையிலிருந்து 12 கைதிகளுக்கு பொது மன்னிப்பு



(கனகராசா சரவணன்)

நத்தார் பண்டிகையை முன்னிட்டு நேற்று (25) மட்டக்களப்பு சிறைச்சாலையிலிருந்து 12 சிறைக்கைதிகள் பொது மன்னிப்பு வழங்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நத்தார் பண்டிகையை முன்னிட்டு ஜனாதிபதியால் வழங்கப்படுகின்ற பொது மன்னிப்பின் அடிப்படையில் சிறிய குற்றங்களுக்காகவும் வேறு காரணங்களுக்காகவும் தண்டனை பெற்றவர்களுக்கே குறித்த பொது மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது.

அதற்கிணங்க மட்டக்களப்பு சிறைச்சாலையிலிருந்து 12 ஆண் கைதிகளுக்கு நேற்று பொது மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு சிறைச்சாலை அத்தியட்சகர் நல்லையா பிரபாகரன் தலைமையில் இடம்பெற்ற இதுதொடர்பான நிகழ்வில் சிறைச்சாலையின் பிரதம ஜெயிலர் உள்ளிட்ட சிறைச்சாலை அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

# எலிக்காய்ச்சல், டெங்கு நோய் தொடர்பான மீளாய்வுக் கூட்டம்



(மாளிகைக்காடு செய்தியாளர்)

எலிக்காய்ச்சல் மற்றும் டெங்கு நோய் தொடர்பான மீளாய்வுக் கூட்டமொன்று கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் இடம்பெற்றது.

பிராந்திய தொற்றுநோய்த் தடுப்புப் பிரிவின் ஒருங்கிணைப்பில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸதீன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பிராந்திய தொற்றுநோய்த் தடுப்புப் பிரிவுப் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.ஏ.சீ.எம்.பஸால், சுகாதார வைத்திய அதிகாரிகள், மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் கலந்து கொண்டனர்.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் பூச்சியியல் ஆய்வுக் குழுவின் பொறுப்பாளர் சுகாதார பூச்சியியல் உத்தியோகத்தர் கே.ஏ.ஹமீட் தயாரித்த வருடாந்த பூச்சியியல் ஆய்வறிக்கை இந்த மீளாய்வுக் கூட்டத்தின்போது வெளியிடப்பட்டது. இதன் பிரதிகளை பிராந்திய பணிப்பாளர், தொற்று நோய்த் தடுப்புப் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி ஆகியோருக்கு பூச்சியியல் உத்தியோகத்தர் ஹமீட் வழங்கி வைத்தார்.



மட்டக்களப்பு புனித மரியாள் தேவாலயத்தில் நத்தார் நள்ளிரவு ஆராதனைகள் மறை மாவட்ட ஆயர் அண்டன் ரஞ்சித் ஆண்டகை தலைமையில் நேற்று(25) ஒப்புக்கொடுக்கப்பட்டது. ஆலய பங்குத் தந்தைகளான ஸ்டனிஸ்லோஸ் மற்றும் ஜெயகாந்தன் ஆகியோரால் நள்ளிரவு ஆராதனைகள் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.
(வாழைச்சேனை, வீரமுனை செய்தியாளர்கள்)





மூதூர், இருதயபுரம் இருதயநாதர் தேவாலயத்தின் கிறிஸ்மஸ் நள்ளிரவு ஆராதனை அருட்தந்தை அன்ரன் சேவியர் அமல்ராஜ் தலைமையில் நேற்று(25) இடம்பெற்றது. இவ்வாராதனையின்போது அதிகளவு கிறிஸ்தவ மக்கள் பங்குபற்றியிருந்ததோடு ஆலய வளாகத்தில் பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டிருந்தது. (மூதூர் செய்தியாளர்)







மட்டக்களப்பு சீயோன் தேவாலயத்தில் நேற்று(25) நத்தார் தின ஆராதனை நிகழ்வுகள் தலைமைப் போதகர் ரொஷான் மகேசன் தலைமையில் இடம்பெற்றன.
(மட்டக்களப்பு, வாழைச்சேனை செய்தியாளர்கள்)

# அம்பாறை பகுதிகளில் நத்தார் தினத்தில் அலங்கரிக்கப்பட்ட கிறிஸ்மஸ் மரங்கள்

## நள்ளிரவு ஆராதனை நிகழ்விலும் பெருமளவானோர் பங்கேற்பு



(பாறுக் ஷிஹான்)

நத்தார் தினத்தை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் உயரமான கிறிஸ்மஸ் மரங்கள் அமைக்கப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டிருந்ததை காணமுடிந்தது. குறிப்பாக, அம்பாறை மாவட்டத்தின் பல்வேறு பிரதேசங்களிலும் பல வர்ணங்களில் கிறிஸ்மஸ் மரங்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. செய்யப்படுவதைக் காணக்கூடியதாக இருந்தது.

நத்தார் அலங்காரப் பொருட்கள் இப்பகுதியில் மும்முரமாக விற்பனையாகின. கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு நத்தார் வியாபாரம் களை கட்டியதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

நத்தார் பண்டிகை கிறிஸ்தவ மக்களால் கொண்டாடப்படும் பண்டிகையாக இருந்தாலும் அப்பகுதிகளிலுள்ள அனைத்து வீடுகளிலும் அலங்கரிக்கப்பட்டிருந்ததைக் காணமுடிந்தது.

இது தவிர, நத்தார் நள்ளிரவு திருப்பலி கல்முனை திரு இருதயநாதர் தேவாலயத்தில் பங்குத்தந்தை பேதுறு ஜீவராஜ் தலைமையில் கூட்டுத்திருப்பலியாக ஒப்புக்கொடுக்கப்பட்டது. அத்துடன், தேவாலயத்தைச் சுற்றி இராணுவத்தினரும் பொலிஸாரும் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

நத்தார் ஆராதனையில் அதிகளவிலான பக்தர்கள் கலந்துகொண்டு வழிபாடுகளில் ஈடுபட்டனர்.





அக்கரைப்பற்று அசெம்பிளி ஒவ் கோட் திருச்சபையில் நத்தார் தின விசேட ஆராதனை நிகழ்வுகள் பிரதான போதகர் கே.ரவிகரனின் தலைமையில் நேற்று(25) இடம்பெற்றன.
(ஆலையடிவேம்பு செய்தியாளர்)



நத்தார் தின விசேட நள்ளிரவு ஆராதனை தேற்றாத்தீவு புனித யூதா திருத்தலத்தில் நேற்று(25) நடைபெற்றது. இந்நிகழ்வு ஆலய அருட்தந்தை தேவதாசன் அடிகளார் தலைமையில் இடம்பெற்றதுடன், திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்பட்டது. இவ் ஆராதனையில் அப்பகுதியைச் சேர்ந்த பக்தர்கள் கலந்து கொண்டனர். (மட்டக்களப்பு, குருக்கள்மடம் செய்தியாளர்கள்)

# பணி இடைநிறுத்தப்பட்டிருந்த மின்சார சபை ஊழியர்கள் 62 பேர் மீண்டும் பணிக்கு

இலங்கை மின்சார சபையை தனியார் மயமாக்கும் திட்டம் தொடர்பில் போராட்டம் நடத்தியதற்காக பணி இடைநிறுத்தம் செய்யப்பட்ட 62 ஊழியர்கள் மீண்டும் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

வலுசக்தி அமைச்சர் பொறியியலாளர் குமார ஜயக்கொடியின் உத்தரவின் பேரில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அனைத்துக் குற்றச்சாட்டுகளிலிருந்தும் ஊழியர்களை விடுவிக்கவும் அவர்களது முந்தைய பணியிடங்களில் மீண்டும் பணியில் அமர்த்தவும் அபராதங்களிலிருந்து விடுவிக்கவும் இலங்கை மின்சார சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த ஊழியர்களுக்கு அமைச்சர் ஜயக்கொடி நேற்று முன்தினம் (24) மீண்டும் பணியில் சேர்ப்பதற்கான கடிதங்களை வழங்கினார்.

இலங்கை மின்சார சபையை தனியார் மயமாக்கும் திட்டம் இருப்பதாகக் கூறி கடந்த ஜனவரி மாதம் இலங்கை மின்சார சபையின் தொழிற்சங்கங்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தன.

அப்போதைய வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர, இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்ட ஊழியர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியிருந்தார்.

இந்நிலையில் மின்சார விநியோகம் அத்தியாவசிய சேவையாகப் பிரகடனப் படுத்தப்பட்ட போதிலும், பாவனையாளர்களுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தி, கடமைகளைச் செய்யாதவர்களை பணி இடைநிறுத்தம் செய்தமை குறிப்பிடத்தக்கது.

# நாடு முழுவதும் 200 புகையற்ற வலயங்களை நிறுவ புதிய திட்டம்

## பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவிப்பு




நாடு முழுவதும் 200 புகையற்ற வலயங்களை நிறுவுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சந்துன் ரத்நாயக்க, புகையில்லா சமூகத்தை மேம்படுத்தும் பரந்த வேலைத்திட்டத்தின் ஓர் அங்கமாக இத்திட்டம் அமுல்படுத்தப் படவுள்ளது.

இதன்படி, இந்த வலயங்களில் சிகரெட் விற்பனை மற்றும் புகைத்தல் முற்றாகத் தடை செய்யப்படும்.

புகைப்பிடிப்பதால் ஏற்படும் தீமைகள் குறித்து மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தவும் சம்பந்தப்பட்ட பகுதிகளில் விளம்பரங்களைக் காட்சிப்படுத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மதகுருமார்கள், தன்னார்வக் குழுக்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள், ஆசிரியர்கள், அதிபர்கள், இளைஞர் சமூகம் உள்ளிட்ட பெருந்திரளான மக்கள் இவ்வேலைத்திட்டத்துக்கு ஆதரவளித்துள்ளனர்.

இலங்கையை புகையிலையற்ற நாடாக மாற்றுவதே இதன் முக்கிய நோக்கமாகும். பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் இந்த வேலைத்திட்டத்தை விரிவுபடுத்தத் திட்டமிட்டுள்ளது என்றார்.

இதேவேளை, புகைபிடித்தல் மற்றும் அது தொடர்பான நோய்களினால் இலங்கையில் வருடாந்தம் சுமார் 20 ஆயிரம் பேர் உயிரிழப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# மாளிகாகந்த நீதிமன்றத்துக்கு முன்னால் துப்பாக்கிச்சூடு நடத்திய சம்பவம்

## மற்றுமொரு சந்தேகநபர் கைது



மாளிகாகந்த நீதிமன்றத்துக்கருகில் பெண்ணொருவரை துப்பாக்கியால் சுட்டுக்கொல்ல முயற்சித்த சம்பவத்துடன் தொடர்புடைய மற்றுமொருவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் மருதானை பொலிஸாரும் கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினரும் விசாரணைகளை ஆரம்பித்திருந்தனர்.

விசாரணைகளின் அடிப்படையில் துப்பாக்கிச்சூடு நடத்தியவர் மறைந்திருந்த வீட்டின் உரிமையாளரும் அவரது மனைவியும் துப்பாக்கியை மறைத்திருந்தமை தெரியவந்துள்ளது.

அதன்படி கடந்த 20ஆம் திகதி கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினரால் வீட்டின் உரிமையாளர்கள் இருவரும் கைது செய்யப்பட்டனர்.

விசாரணையில் முச்சக்கர வண்டிச் சாரதியொருவரிடம் துப்பாக்கி கொடுக்கப்பட்டது தெரியவந்துள்ளது. அதன்படி முச்சக்கரவண்டிச் சாரதியும் கடந்த 22ஆம் திகதி பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார்.

அவரிடம் நடத்திய விசாரணையில் துப்பாக்கியை கொழும்பு, ஜம்பட்டா வீதியில் உள்ள ஒருவரிடம் கொடுத்தது தெரியவந்தது.

கிடைத்த தகவலின் அடிப்படையில் துப்பாக்கியை பெற்றுக்கொண்ட சந்தேகநபர் நேற்று முன்தினம் (24) கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு-13, ஜம்பட்டா வீதியில் வசிக்கும் 37 வயதுடைய சந்தேகநபரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொழும்பு குற்றத்தடுப்புப்பிரிவு மற்றும் மருதானை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ரயில் பயணச்சீட்டை புதுப்பிக்க நடவடிக்கை

தற்போது பயன்படுத்தப்படும் ரயில் பயணச்சீட்டுக்குப் பதிலாக முற்பணம் செலுத்திய ரயில் பயணச்சீட்டு அறிமுகப்படுத்தப் படுமென ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்காக தனியார் நிறுவனத்துடன் இணைந்து செயற்பட ஆரம்பித்துள்ளதாகத் திணைக்களம் தெரிவித்துள்ளது. இதன்மூலம் மக்களுக்கு வினைத்திறனான சேவையை



வழங்க முடியுமெனவும் ரயில்வே திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

எதிர்வரும் ஏப்ரல் மாதத்துக்கு முன்னர் புதிய பயணச்சீட்டு அறிமுகம் செய்யப்படவுள்ளது.

அந்த அட்டைகளைப் பயன்படுத்துபவர்கள் ஒவ்வொரு நிலையத்திலிருந்தும் அணுகுவதற்குத் தேவையான தொழில்நுட்பக் கருவிகளும் நிறுவப்படுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், தற்போது பயன்பாட்டில் உள்ள ரயில்வே பயணச்சீட்டக்குப் பதிலாக முற்பணம் செலுத்திய பயணச்சீட்டுகளை பரிசோதிக்க அதிகாரிகளுக்கு பயிற்சியளிக்கப்படுமென ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

# கைதுசெய்யச் சென்றவேளை விஷம் அருந்திய சந்தேகநபர்

## மொனராகலையில் சம்பவம்



(கெலும் குணதிலக)

மொனராகலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மறவ, கிவுலேஆர பகுதியில் வசிக்கும் சந்தேக நபரொருவரைக் கைதுசெய்யச் சென்றவேளை அவர் விஷம் அருந்தியதாக மொனராகலை பொலிஸார் தெரிவித்தனர்.

தனது சகோதரியுடன் பல வருடங்களாக வெளி நபரொருவர் வசித்து வருவதாகவும் அவர் மீது சந்தேகம் இருப்பதாகவும் கிவுலே ஆர பிரதேசத்தில் வசிக்கும் ஒருவர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்றைப் பதிவுசெய்திருந்தார்.

குறித்த சந்தேகநபர் கடற்படைச் சிப்பாய் எனவும் அவரது தாயார் ஓய்வூதியம் பெற்று வருவதாகவும் மொனராகலை பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருக்கு தகவல் கிடைத்துள்ளது.


இதன்படி, சந்தேக நபரைக் கைதுசெய்வதற்காக, பிரதேச குற்றப் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் குழு, கிவுலேஆர பகுதியிலுள்ள அவரது வீட்டுக்குச் சென்று அவரது அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக அடையாள அட்டையைக் கேட்டுள்ளனர்.

அதனை வழங்குவதற்காக வீட்டுக்குள் சென்ற அவர் விஷப் போத்தலை எடுத்துக் குடித்துள்ளார். பின்னர் அம்பியூலன்ஸ் மூலம் மொன ராகலை மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். சந்தேகநபர் அம்பலாந்தோட்டை பிரதேசத்தில் வசிக் கும் 43 வயதுடையவர் என்பதுடன், அவரது உண்மையான பெயர் இதுவரை வெளியிடப்படவில்லை. அவர் தற்போது மொனராகலை மாவட்ட பொது வைத்தியசாலையில் பொலிஸ் பாதுகாப்பில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

மொனராகலை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# 146ஆவது வருட புனித ஸஹீஹுல் புஹாரி ஹதீஸ் பாராயண மஜ்லிஸ்

(பேருவளை பீ.எம். முக்தார்)



பேருவளை, மாளிகாஹேனை பைத்துல் முபாரக் வதாருல் முஸ்தபா புஹாரித் தக்கியாவில் 146ஆவது வருட புனித ஸஹீஹுல் புஹாரி ஹதீஸ் பாராயண மஜ்லிஸ் எதிர்வரும் 28 ஆம் திகதி ஸுபஹ் தொழுகையின் பின்னர் ஆரம்பமாகும்.

காதிரிய்யதுன் நபவிய்யா தரீக்காவின் ஆன்மீகத் தலைவர் சங்கைக்குரிய நாயகம் அல் - ஆலிமுல் பாழில் வஷ்ஷெய்ஹு காமில் அஹ்மத் பின் முஹம்மத் ஆலிம் காதிரிய்யதுன் நபவி தலைமையில் இப் புனித மஜ்லிஸ் ஆரம்பமாகும்.

வெள்ளிக்கிழமை தவிர தொடர்ந்து ஒரு மாத காலம் புனித ஸஹீஹுல் புஹாரி ஹதீஸ் பாராயணம் செய்யப்படுவதோடு, விளக்கவுரையும் இடம்பெறும்.

2025 ஜனவரி மாதம் 30ஆம் திகதி முற்பகல் தமாம் பெரிய கந்தூரி இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

புஹாரிக் கந்தூரி மஜ்லிஸை முன்னிட்டு இலங்கை ரயில்வே திணைக்களம் 146ஆவது வருடமாகவும் 2025 ஜனவரி 29ஆம், 30ஆம் திகதிகளில் கொழும்பு - அளுத்கம, காலி - அளுத்கம இடையே விஷேட ரயில் சேவைகளை நடத்தவுள்ளது.

அத்தோடு, கரையோர ரயில் சேவையில் ஈடுபடும் சகல கடுகதி ரயில்களும் ஜனவரி 29ஆம், 30ஆம் திகதிகளில் பேருவளை ரயில் நிலையத்தில் நிறுத்தப்படும். மேலும் அளுத்கம - களுத்துறையிடையே விசேட பஸ் சேவைகளும் இடம்பெறவுள்ளன.

கந்தூரி மஜ்லிஸில் நாட்டின் நாலா பகுதிகளையும் சேர்ந்த ஆயிரக்கணக்கான முஸ்லிம்கள் பங்குபற்றுவர். பேருவளை பொலிஸார் பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்வர்.

சரித்திரப் பிரசித்தி பெற்ற பைத்துல் முபாரக் வதாருல் முஸ்தபா புஹாரித் தக்கியா பாரிய அளவில் மிக அழகான முறையில் விஸ்தரிக்கப்பட்டு வருகின்றமையும் இங்கு குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

கந்தூரி தமாம் தினமும் அதற்கு முன்னைய தினமும் நபவிய்யா இலவச மருத்துவ சேவை முகாமும் புஹாரித் தக்கியா வளவில் இடம் பெறவுள்ளன.

# பாராளுமன்றத்தின் ஏற்பாட்டில் கிறிஸ்மஸ் கரோல்





சபாநாயகரின் வழிகாட்டலில் பாராளுமன்றத்தின் பணியாளர்களினால் அவர்களினதும் இணைந்த சேவைகளின் பணியாளர்களினதும் பிள்ளைகளுக்காக ஏற்பாடு செய்யப்பட்ட கிறிஸ்மஸ் கரோல் இசை நிகழ்வு கடந்த 23ஆம் திகதி பாராளுமன்ற வளாகத்தில் இடம்பெற்றது.

கொழும்பு மறைமாவட்ட பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகையைப் பிரதிநிதித்துவப்படுத்தி மறைமாவட்டத்தின் காணி மற்றும் சொத்துகளுக்கான இணை நிர்வாகி அருட்தந்தை க்ரிஷ்னக டிலான் பெரேரா தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

சகல இனங்கள், மதங்களுக்கிடையில் ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்தை மேம்படுத்தும் நோக்கில் ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வில் பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர, உதவிச் செயலாளர் நாயகம் ஹன்ச அபேரத்ன மற்றும் திணைக்களங்களின் பணிப்பாளர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

கரோல் இசை நிகழ்வு ஆரம்பிக்கப்பட முன்னர் பாராளுமன்ற வளாகத்தில் அமைக்கப்பட்ட மின்னொளி ஊட்டப்பட்ட கிறிஸ்மஸ் மரம் உத்தியோகபூர்வமாகத் திறந்துவைக்கப்பட்டது.

பாராளுமன்றப் பணியாளர்கள் மற்றும் இணைந்த சேவையிலுள்ள பணியாளர்களின் பிள்ளைகள் உள்ளிட்ட குடும்ப உறுப்பினர்கள் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

இதன்போது பிள்ளைகளை மகிழ்வூட்டும் வகையில் வேடிக்கை நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன், அவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன. இந்நிகழ்வு முடிவடைந்ததும் கண்கவர் வானவேடிக்கையும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த நிகழ்வு தொடர்பில் கருத்துத் தெரிவித்த பாராளுமன்ற செயலாளர் நாயகம் குறிப்பிடுகையில், பாராளுமன்ற விசேட திட்டக் குழுவின் நிதி பாராளுமன்ற பணியாளர்களின் ஏனைய சங்கங்களின் நிதி அனுசரணையில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.







***நத்தார் பண்டிகையை முன்னிட்டு பாணந்துறை நகர் கல்கொட ஸ்ரீ மஹா விகாரையின் விகாராதிபதி இரத்தினபுரி பொத்துபிட்டிய பஞ்சாலோக தேரர் தலைமையில் சமூக பிரதிநிதிகள் வலான விக்சோப மாதா கிறிஸ்தவ தேவாலயத்துக்கு நேற்று முன்தினம் (24) காலை நல்லெண்ண விஜயம் மேற்கொண்டனர். பாணந்துறை பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் உள்ளிட்ட பிரமுகர்கள் இவ்விஜயத்தில் பங்கேற்றனர். (எம்.எஸ்.எம்.முன்தஸிர்)***

# உலக நலன்வேண்டி தஞ்சையில் சைவசமய செந்தமிழ் எழுச்சி விழா

உலக நலன் வேண்டி திருமுறைப் பாராயணம் மற்றும் சைவசமய செந்தமிழ் எழுச்சிப் பெருவிழா நிகழ்வு தஞ்சாவூரில் நடைபெறவுள்ளது.

தஞ்சாவூர் திருநெறி தமிழ் சைவசமய பாதுகாப்புப் பேரவை ஏற்பாடு செய்துள்ள இப்பெருவிழா நிகழ்வுகள் கரந்தைத் தமிழ்ச் சங்கம் பெருமன்றத்தில் நாளை மறுதினம் சனிக்கிழமை (28) மற்றும் ஞாயிற்றுக்கிழமை (29) ஆகிய இரு நாட்கள் இடம்பெறவுள்ளன. இதன்போது திருமுறைப் பாராயணம், ஆன்மீக சொற்பொழிவுகள், கலந்துரையாடல்கள் உட்பட பல்வேறு நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

இந்நிகழ்வை பாரதீய ஜனதா மாநிலப் பொதுச் செயலாளர் ஆ.முருகானந்தம்,கரந்தைத் தமிழ்ச் சங்கச் செயலாளர் இராம.சுந்தரவதனம், சிவசேனா மாநிலச் செயல் தலைவர் பாவை.க.சசிகுமார் ஆகியோர் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைக்கவுள்ளனர்.


கையிலாய பரம்பரை வேளாக்குறிச்சி ஆதீனம், 18ஆவது குருமகா சன்னிதானம் விழாவுக்கு முன்னிலை வகித்து ஆசி வழங்கவுள்ளார்.

அதன் தொடர்ச்சியாக தமிழகத்தின் தலைசிறந்த ஓதுவார் மூர்த்திகளை கொண்டு சிறப்பு திருமுறை இன்னிசை, பேராசிரியர், பட்டதாரி ஆசிரியர், தமிழ் அறிஞர் பெருமக்களைக் கொண்டு இரண்டு நாட்களும் சிறப்புப் பட்டிமன்றம், சமயச் சொற்பொழிவுகள் என பல்சுவை நிகழ்ச்சிகள்இடம்பெறவுள்ளன.

பேரியக்கத்தின் நிறுவனத்தலைவர், திருமுறை கலைக்களஞ்சியம் தெய்வத்தமிழிசை அறிஞர் சைவசமயப் புரட்சியாளர் திருமுறை புரட்சி வேந்தர் சைவத்தமிழ்ச் சுடர்மணி முனைவர் திருவிடைமருதூர் சிவ.ச.நடராஜதேசிகர் விழாவை தலைமையேற்று நடத்தவுள்ளார்.

இலங்கையிலிருந்து குருசுவாமிகளான வீரப்பன் சிவானந்தன், பி.லோகநாதன் உட்பட சுவாமிமார்களும் பக்தர்களும் இந்நிகழ்வில் கலந்துகொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

www.thamilan.lk
வியாழக்கிழமை டிசம்பர் 26, 2024
தமிழன்





# 72 பேருடன் வீழ்ந்து நொருங்கிய அஸர்பைஜான் எயார்லைன்ஸ் விமானம்

## 42 பேர் உயிரிழப்பு; 30 பேர் படுகாயம்; கசகஸ்தானில் தரையிறங்கியபோது விபத்து

கசகஸ்தானின் அக்டாவ் விமான நிலையத்தில் 72 பயணிகளுடன் அவசரமாக தரையிறங்க முயன்ற அஸர்பைஜான் எயார்லைன்ஸ் விமானமொன்று வீழ்ந்து நொருங்கியதில் 42 பேர் உயிரிழந்துள்ளதுடன் 30பேர் காயமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ரஷ்ய செய்தி நிறுவனத்தின் கூற்றுப்படி, விபத்துக்குள்ளான அஸர்பைஜான் விமானம் ஜெ2-8243 பாகுவிலிருந்து ரஷ்யாவின் க்ரோஸ்னிக்கு சென்று கொண்டிருந்த நிலையில், க்ரோஸ்னியில் நிலவிய மோசமான வானிலை காரணமாக விமானம் திருப்பி விடப்பட்டுள்ளது. அந்த விமானம் கசகஸ்தானின் அகடாவ் விமான நிலையத்தில் அவசரமாக தரையிறங்கியபோது விபத்துக்குள்ளானது.

விமானம் விபத்துக்குள்ளானபோது, அதில், ஐந்து விமான சிப்பந்திகளுடன் 67 பயணிகள் இருந்தனர் என்று அதிகாரிகள் தெரிவித்தனர். இவ்விபத்தில் 42பேர் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

விபத்து குறித்து வெளியான வீடியோவில் விமானம் விபத்துக்குள்ளானபோது, வேகமாக உயரமிழந்து



மோதி தீப்பிழம்புகளுடன் விபத்துக்குள்ளாவது பதிவாகியுள்ளது. அதிக புகை மூட்டம் காரணமாக விமானம் விபத்துக்குள்ளானதாக தெரிவிக்கப்படுகிறது. விமானம் திறந்த வெளியில் விழுந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்து இடம்பெற்ற இடத்தில் அவசர சேவைகள் பிரிவு தீயை அணைத்தது. விபத்தில் உயிர் பிழைத்தவர்கள் சிகிச்சைக்காக அருகிலுள்ள வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டதாக கசகஸ்தான் அவசரத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதனிடையே, அஸர்பைஜான் எயார்லைன்ஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில், ''அஸர்பைஜான் எயார்லைன்ஸால் இயக்கப்படும் எம்பரர் 190 விமானம், பாகு - க்ரோனி வழித்தடத்தில் அக்டாவ் நகருக்கு அருகே மூன்று கிலோ மீற்றருக்கு முன்பு அவசரமாக தரையிறக்கப்பட்டது. இந்த சம்பவம் தொடர்பான கூடுதல் தகவல்கள் பொதுமக்களுக்கு வழங்கப்படும்'' - என்று தெரிவித்துள்ளது.

தொழில்நுட்ப கோளாறு போன்ற எந்த காரணத்தால் விமானம் விபத்துக்குள்ளானது என்று பல்வேறு கோணத்தில் விசாரணை நடந்து வருகிறது என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.



# அமெரிக்காவின் தேசிய பறவையாகும் வழுக்கை கழுகு

அமெரிக்காவின் தேசிய பறவையாக வழுக்கை கழுகு அறிவிக்கப்பட்டுள்ளது.

வழுக்கை கழுகு (Bald Eagle) வட அமெரிக்காவில் முதன் முதலில் கண்டுபிடிக்கப்பட்டது. தலைப்பகுதியில் வெள்ளை நிறம் கொண்டுள்ள இந்த கழுகு அமெரிக்காவில் சக்தி மற்றும் வலிமையின் அடையாளமாக கருதப்படுகிறது. அமெரிக்க வரலாற்றுடன் வழுக்கை கழுகுகளுக்கு 240 ஆண்டுகளுக்கு மேல் தொடர்புள்ளது.

இதையடுத்து, வழுக்கை கழுகை அமெரிக்காவின் தேசிய பறவையாக அறிவிக்க வேண்டுமென கோரிக்கை எழுந்து வந்தது.

இந்நிலையில், வழுக்கை கழுகு அமெரிக்காவின் தேசிய பறவையாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கான மசோதாவுக்கு அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் அனுமதியளித்துள்ளார். இதன் மூலம் வழுக்கை கழுகு அமெரிக்காவின் தேசிய பறவையாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

# ஆப்கான் மீது பாகிஸ்தான் வான் தாக்குதல்; 15 பேர் பலி

பாகிஸ்தானிலிருந்து வான்வழியே ஆப்கானிஸ்தான் மீது ஜெட் விமானங்கள் மூலம் மேற்கொண்ட குண்டுத் தாக்குதலில் 15 பேர் உயிரிழந்துள்ளனர்.

ஆப்கானிஸ்தானின் பக்திகா மாகாணத்தில் பர்மால் மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் நள்ளிரவு பாகிஸ்தானிலிருந்து தொடர்ச்சியாக வான்வழித் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதில், பெண்கள் மற்றும் குழந்தைகள் உட்பட 15 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்தத் தாக்குதலால் 07 கிராமங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இதில், ஒரே குடும்பத்தின் 05 உறுப்பினர்கள் உயிரிழந்துள்ளனர். பாகிஸ்தானிலிருந்து ஜெட் விமானங்கள் குண்டுமழை பொழிந்துள்ளது என உள்ளூர் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இந்த தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கப்படும் என்று தலிபான்களின் பாதுகாப்பு அமைச்சகம் சூளுரைத்துள்ளது. நிலம் மற்றும் இறையாண்மையை பாதுகாப்பது என்பது தங்களுடைய சட்ட உரிமை என அமைச்சகம் குறிப்பிட்டுள்ளது.

# காஸாவில் ஒரு மணிநேரத்துக்கு ஒரு குழந்தை உயிரிழப்பு



## ஐ.நா. அதிர்ச்சி தகவல்

காஸாவில் ஒரு மணிநேரத்துக்கு ஒரு குழந்தை கொல்லப்படுவதாக பலஸ்தீனத்துக்கான ஐ.நாவின் நிவாரணக் குழு தெரிவித்துள்ளது.

மேலும், குழந்தைகள் தங்குவதற்கு இடமில்லாமல் தவிப்பதாகவும் போர் தொடங்கியதிலிருந்து 14,500 குழந்தைகள் கொல்லப்பட்டதாகவும் யுனிசெஃப் தெரிவித்துள்ளதாகவும் ஐ.நா. வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் போராளிகளுக்கிடையிலான போர் கடந்த 2023ஆம் ஆண்டு ஒக்டோபர் 07ஆம் திகதி தொடங்கிய நிலையில் இப்போர் இன்று ஓராண்டை கடந்தும் நீடித்து வருகிறது. காஸா மீதான இஸ்ரேலின் தாக்குதலில் இதுவரை 45,361இற்கும் மேற்பட்ட பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளதுடன் 107,803இற்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர். இதில், ஆயிரக்கணக்கான சிறுவர்கள், பெண்கள் உள்ளடங்குகின்றனர்.

இதுகுறித்து ஐ.நா. வெளியிட்ட அறிக்கையில், "சிறுவர்களைக் கொல்வதை நியாயப்படுத்த முடியாது. உயிர் பிழைத்தவர்கள் உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் காயமடைந்துள்ளனர். கற்றல் இல்லாமல், காஸாவிலுள்ள சிறுவர்களும் சிறுமிகளும் இடிபாடுகளுக்குள் சிக்கியுள்ளனர்.

இந்தக் குழந்தைகளுக்கான எச்சரிக்கை மணி ஒலித்துக் கொண்டிருக்கிறது. அவர்கள் தங்கள் வாழ்க்கை, எதிர்காலத்துக்கான நம்பிக்கையை இழக்கிறார்கள்" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனிடையே, இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாஹு திங்கட்கிழமை தெரிவித்ததாவது:

"ஹமாஸுடன் பணயக் கைதிகளை திரும்பப் பெறுவதற்கான போர் நிறுத்த ஒப்பந்தம் கொண்டுவருவதில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. எவ்வளவு நாட்கள் எடுக்கும் எனத் தெரியவில்லை. ஆனால், அனைவரையும் வீட்டுக்கு திரும்பிக் கொண்டு வரும் வரை முயற்சிகள் அனைத்தும் தொடரும்" - என்றார்.

## விண்வெளியிலிருந்து வந்த வாழ்த்துச் செய்தி

# ''பூமியிலுள்ள அனைவருக்கும் கிறிஸ்மஸ் வாழ்த்துகள்''



''பூமியிலுள்ள அனைவருக்கும் சர்வதேச விண்வெளி வீரர்களான எங்களின் கிறிஸ்மஸ் வாழ்த்துகள்'' என சர்வதேச விண்வெளி நிலையத்திலிருந்து விண்வெளி வீரர்களான சுனிதா வில்லியம்ஸ் மற்றும் அவரது குழுவினர் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

விண்வெளியில் சுனிதா வில்லியம்ஸ் மற்றும் அவரது குழுவினர் கிறிஸ்மஸ் கொண்டாடிய வீடியோவை நாசா வெளியிட்டுள்ளது.

சர்வதேச விண்வெளி நிலையத்தில் 06 மாதங்களுக்கு மேல் தங்கியுள்ள இந்திய வம்சாவளியைச் சேர்ந்த சுனிதா வில்லியம்ஸ் மற்றும் அவரது குழுவினர் பூமியிலிருக்கும் மக்களுக்கு கிறிஸ்மஸ் வாழ்த்துச் செய்தியை தெரிவித்துள்ளனர். விண்வெளியில் கிறிஸ்மஸ் கொண்டாடும் வீடியோ பதிவு ஒன்றை நாசா வெளியிட்டுள்ளது.

அந்த வீடியோவில், ''பூமியிலுள்ள அனைவருக்கும், சர்வதேச விண்வெளி வீரர்களான எங்களின் கிறிஸ்மஸ் வாழ்த்துகள். சர்வதேச விண்வெளி நிலையத்துக்கு வரவேற்கிறோம். கிறிஸ்மஸ் விடுமுறைக்கு நாங்கள் தயாராகிக்கொண்டிருக்கிறோம். நாங்கள் 07 பேர் இங்கே இருக்கிறோம். நாங்கள் ஒன்றாக இணைந்து கிறிஸ்மஸ் கொண்டாடவுள்ளோம்''- என அந்த வீடியோவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சூரியனை மிக நெருங்கி கடந்த நாசா விண்கலம்



சூரியனை ஆய்வு செய்வதற்காக அமெரிக்க விண்வெளி ஆய்வு மையமான நாசா அனுப்பியுள்ள பர்கெர் (Parker) விண்கலம், இதுவரை இல்லாத மிக நெருக்கத்தில் சூரியனைக் கடந்துள்ளது.

வெள்ளி கிரகத்தின் சுற்றுவட்டப் பாதையைப் பயன்படுத்தி ஏழு ஆண்டுகளுக்கு சூரியனை சுற்றிவந்து ஆய்வு செய்வதற்காக பர்கெர் விண்கலம் கடந்த 2018ஆம் ஆண்டு விண்ணில் செலுத்தப்பட்டது. இந்நிலையில், நேற்று மாலை 5.23 மணியளவில் சூரியனை பர்கெர் விண்கலம் இதுவரை இல்லாத மிக நெருக்கத்தில் கடந்துள்ளது. சூரியனிலிருந்து 38 இலட்சம் கி.மீ. தொலைவில்தான் அந்த விண்கலம் கடக்கும் என்றாலும், மனிதர்களால் உருவாக்கப்பட்ட ஒரு பொருள் சூரியனை அந்தளவுக்கு நெருங்குவது இதுவே முதன்முறை என்பது குறிப்பிடத்தக்கது.

எனவே, சூரியனைப் பற்றி இதுவரை தெரியாத பல உண்மைகளை அந்த விண்கலம் மூலம் தெரிந்துகொள்வதற்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாக நாசா விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

பர்கெர் விண்கலம் சூரியனைக் கடக்கும்போது 1,700 டிகிரி ஃபாரன்ஹீட் வரை அதன் வெப்பம் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எனினும், அதன் உட்பாகங்கள் சாதாரண அறை வெப்பத்திலிருக்கும் அளவுக்கு கார்பன் கலவைப் பொருள் மூலம் அந்த விண்கலத்தின் மேல்பகுதி அமைக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

# ஈபிள் டவரில் தீ விபத்து



கிறிஸ்மஸ் கொண்டாட்டத்தின் போது பாரிஸ் நகரில் அமைந்துள்ள ஈபிள் கோபுரத்தில் நேற்றுமுன்தினம் (24) தீ விபத்து ஏற்பட்டுள்ளது. இதையடுத்து, அங்கிருந்த சுமார் 1,200 சுற்றுலாப் பயணிகள் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டனர். தொடர்ந்து தீயணைப்புப் படையினர் தீயை அணைத்தனர்.

பிரான்ஸ் என்றதுமே எம் அனைவருக்கும் கம்பீரமாக நிற்கும் ஈபிள் கோபுரம் தான் சட்டென கண்முன் வந்து செல்லும். உலகளவில் அனைவரும் அறிந்த அடையாள சின்னமாக இருக்கும் ஈபிள்



கோபுரத்தை நாள்தோறும் உள்நாடு மற்றும் வெளிநாடு என சுமார் 25,000 மக்கள் பார்வையிடுவது வழக்கம். இந்த சூழலில் தான் அதில் தீ விபத்து ஏற்பட்டது.

ஈபிள் கோபுரத்திலுள்ள லிப்ட் ஷாஃப்டின் கேபிளில் ஏற்பட்ட அதீத வெப்பம் தான் தீ விபத்துக்கு காரணம் என்ற தகவல் வெளியாகியுள்ளது. தீப்பற்றியதையடுத்து, சுற்றுலா பயணிகள் வெளியேற்றப்பட்டனர். தொடர்ந்து தீயணைப்புப் படை வீரர்கள் போராடி தீயை அணைத்தனர்.

இதற்கு முன்னர் கடந்த 1956இல் ஈபிள் கோபுரத்தில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது. அப்போது ஏற்பட்ட பாதிப்புகளை சீர் செய்ய ஓராண்டு காலம் பிடித்தது குறிப்பிடத்தக்கது.

உலகின் முதல் உயர்ந்த கோபுரம் என்ற பெருமையை தன்னகத்தே தாங்கி நிற்கிறது ஈபிள் கோபுரம். 1931ஆம் ஆண்டு வரையில் உலகின் உயர்ந்த கோபுரமாக அறியப்பட்டது. குஸ்தேவ் ஈபிள் என்ற இரும்புக் கட்டுமான வல்லுநரால் உருவாக்கப்பட்டது. இரும்புத் துண்டுகளை வைத்து 984 அடிக்கு பிரமாண்டமாகக் கட்டப்பட்ட கட்டிட அமைப்பு என்பது குறிப்பிடத்தக்கது.

# தீயினால் பாதிக்கப்பட்ட கபரகல மக்களுக்கு காணிகளை வழங்க பேச்சுவார்த்தை

## பாராளுமன்ற உறுப்பினர் இராதா தெரிவிப்பு

(எஸ்.கணேசன்)



கபரகல தோட்டத்தில் அண்மையில் ஏற்பட்ட தீ விபத்தினால் பாதிக்கப்பட்ட 20 குடும்பங்கள் தொடர்பாக நுவரெலியா மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் வேலுசாமி இராதாகிருஷ்ணனின் கவனத்துக்கு கொண்டுசெல்லப்பட்டது.

இது தொடர்பாக அவரின் பணிப்புரையின் பேரில் முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினர் ஆர்.இராஜாராம் கபரகல தோட்டத்துக்கு விஜயம் மேற்கொண்டு அங்குள்ள மக்களுடன் கலந்துரையாடி அவர்களுடைய பாதிப்புகள் தொடர்பாக ஆராய்ந்து உடனடியாக சுமார் 60 ஆயிரம் ரூபா பெறுமதியான நிவாரணப் பொருட்களைப் பெற்றுக்கொடுத்ததுடன், பாதிக்கப்பட்டவர்களுக்கு தனி வீடுகளை அமைப்பதற்கான காணிகளையும் பெற்றுக் கொடுப்பது தொடர்பாக தோட்ட நிர்வாகத்துடன் கலந்துரையாடியுள்ளார்.

தோட்ட நிர்வாகம் இவர்களுக்கு காணிகளை வழங்க வேண்டுமென இந்தப் பேச்சுவார்த்தையில் தெரிவிக்கப்பட்ட நிலையில், அதனை நிர்வாகம் ஏற்றுக்கொண்டுள்ளதுடன் மிக விரைவில் அவர்களுக்கு காணிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் தோட்ட முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக இராதாகிருஷ்ணன் எம்.பி. விடுத்துள்ள விசேட ஊடக அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

அண்மையில் இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கும் காணிகளை வழங்குவது தொடர்பாக பேச்சுவார்த்தை முன்னெடுக்கப்பட்டு அவர்களுக்கும் காணிகளை வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அதனடிப்படையிலேயே, குறித்த தோட்டத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு காணிகளைப் பெற்றுக்கொடுக்கவேண்டுமென்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டு அது தற்பொழுது ஏற்றுக்கொள்ளப்பட்டு மிக விரைவில் அவர்களுக்கான காணிகளைப் பெற்றுக்கொடுக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அரசாங்கம் நல்லாட்சிக் காலத்தில் இயற்கை அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு முன்னுரிமை என்ற அடிப்படையில் வீடுகள் கட்டப்பட்டதைப் போல புதிய அரசாங்கமும் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள முன்வரவேண்டுமெனவும் இந்த நடவடிக்கையை விரைவுபடுத்த வேண்டுமெனவும் அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# நுவரெலியாவில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உலருணவுப் பொருட்கள் கையளிப்பு





(டி.சந்ரு, செ.திவாகரன்)

நாட்டின் பல பகுதிகளிலும் கடந்த சில வாரங்களாக தொடர்ச்சியாகப் பெய்த மழை காரணமாக வெள்ளப் பெருக்கு, மண்சரிவு போன்ற அனர்த்தங்களுக்கு மக்கள் முகங்கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. குறிப்பாக, வெள்ள அனர்த்தம் காரணமாக நுவரெலியாவிலும் பலத்த பாதிப்புகளை மக்கள் சந்தித்தனர்.

அத்துடன், இதன் காரணமாக மக்கள் இடைத்தங்கல் முகாம்களிலேயே தங்கினர். இவ்வாறு தங்கிய 18 கிராம சேவகர் பிரிவுகளுக்குட்பட்ட 200 குடும்பங்களுக்கு பிரித்தானியாவில் இயங்கி வரும் மலையக மக்கள் ஒன்றியத்தின் சிவசங்கர் தலைமையிலும் பிரித்தானியாவின் OUR SOCIETY UK வின் திருச்செல்வம் தலைமையிலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அண்மையில் (23) உலருணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன.

குறித்த உலருணவுப் பொருட்கள் நுவரெலியா மாநகரசபை சுகாதாரப் பரிசோதகரினால் பரிசோதிக்கப்பட்டு நுவரெலியா பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளரின் மேற்பார்வையின் கீழ் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. குறிப்பாக, பிரித்தானிய மலையக மக்கள் ஒன்றியமானது பிரித்தானியாவில் பதியப்பட்ட மற்றும் இலங்கையின் மலையக மக்களின் கல்வி வளர்ச்சி உட்பட ஏனைய சேவைகளையும் தொடர்ந்து வழங்கி வருகின்ற ஓர் அமைப்பாக விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட மூவர் கைது

(எஸ்.சதீஸ்)

நோர்வூட், கெசல்கமுவ ஓயாவில் சட்டவிரோதமாக மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட மூவரை நோர்வூட் பொலிஸார் கைது செய்துள்ளனர். நேற்று முன்தினம் மதியமே இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

நோர்வூட் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கமையவே குறித்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது.

மாணிக்கக்கல் அகழ்வுக்குப் பயன்படுத்தப்பட்ட உபகரணங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைதுசெய்யப்பட்டவர்கள் கம்பளை, பொகவந்தலாவ, எம்பிலிபிட்டிய ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களாவர்.

# நானுஓயா புனித ரீட்டாம்மாள் தேவாலயத்தில் நத்தார் விசேட ஆராதனை





(செ.திவாகரன்)

நானுஓயா பிரதான நகரிலுள்ள புனித ரீட்டாம்மாள் ஆலயத்தில் இயேசு பாலகனின் பிறப்பை வரவேற்று விசேட ஆராதனைகள் இடம்பெற்றன.

நானுஓயா புனித ரீட்டாம்மாள் தேவாலயத்தில் நத்தார் விசேட ஆராதனை நேற்று (25) நள்ளிரவிலும் காலை நேரத்திலும் நடைபெற்றது.

இந்நிகழ்வுகள் ஆலய அருட்தந்தை செபஸ்டியன் சற்குணராஜ் தலைமையில் இடம்பெற்றதுடன், திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்பட்டுள்ளது.

மேலும், புனித ரீட்டா தேவாலயத்திலும் இயேசுவின் பிறப்பைக் குறிக்கும் வகையில் பாலன் பிறப்பு கொட்டில் அமைக்கப்பட்டு பாலன் திருச்சொருபம் வைக்கப்பட்டிருந்தது.

குறித்த ஆயத்தில் நடைபெற்ற நத்தார் ஆராதனையில் நூற்றுக்கணக்கானோர் கலந்துகொண்டனர்.

நானுஓயா பொலிஸார் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# அரச அதிகாரிகள் மக்களின் தேவையறிந்து தன்னலம் பாராது செயற்பட வேண்டும்

## கலாசார அமைச்சர் தெரிவிப்பு

(எம்.எஸ்.எம்.மஸாஹிம்)



அரச அதிகாரிகள் தன்னலம் பாராது பொது மக்களின் தேவைகளை இனங்கண்டு செயற்படாத வரை மக்களிடம் அரச உத்தியோகத்தர்கள் எந்தவித நம்பிக்கையையும் விசுவாசத்தையும் எதிர்பார்க்க முடியாதென மாத்தளை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரும் புத்தசாசன சமய மற்றும் கலாசார பிரதி அமைச்சருமான கமகெதர திசாநாயக்க தெரிவித்தார்.

மாத்தளை பிரதேச செயலக அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்துக்கு நேற்று முன்தினம் (24) தலைமை வகித்து உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

‘‘அரசியல்வாதிகளும் அரச உத்தியோகத்தர்களும் மக்களின் எண்ணங்களையும் தேவைகளையும் இனங்கண்டு செயற்பட வேண்டும். இன்று மக்கள் மத்தியில் அரச உத்தியோகத்தர்கள், அரசியல்வாதிகள் பற்றிய நம்பிக்கை முற்றிலும் இல்லாமல் போய் விட்டது. நாம் விரும்பினாலும் சரி, விரும்பாவிட்டாலும் சரி அரசியல்வாதிகள், அரச உத்தியோகத்தர்கள் மீது பொதுமக்கள் நம்பிக்கை இழந்தவர்களாகவே உள்ளனர் என்பதே கசப்பான உண்மை.

இந்த நிலையை மாற்றியமைத்திடவே எமது அரசு, அரச உத்தியோகத்தர்கள் சம்பந்தமாக விசேட கவனம் செலுத்தி பொது மக்களுக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கும் மத்தியில் ஒரு நெருங்கிய உறவை ஏற்படுத்த அரச உத்தியோகத்தர்கள் சம்பந்தமாக ஒரு டிஜிட்டல் முறையை உருவாக்க ஆக்கபூர்வமான நடவடிக்கைகளில் இறங்கியுள்ளது.

கடந்த காலங்களில் அரச காரியாலயங்களுக்கு தங்களது தேவைகளுக்காகச் சென்ற பொதுமக்கள் அரச காரியாலயங்களில் பல மணி நேரங்கள் காத்து நின்றதும் தேவைகள் நிறைவேற்றப்படாதவிடத்து வார மற்றும் மாதக் கணக்கிலும் பொது மக்கள் அரச காரியாலயங்களுக்கு அலைந்து திரிந்த அவல நிலையையும் நாம் அவதானித்திருக்கிறோம்.

இந்த நிலை தொடர்ந்தும் இடம்பெறக்கூடாது என்பதே எமது அரசின் முக்கிய குறிக்கோளாகும். தயவு செய்து உங்களை நாடி வரும் பொது மக்களை அன்புடன் வரவேற்று அவர்களின் தேவைகளை நிறைவேற்றிக் கொடுங்கள். வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மக்கள் மீது உங்கள் விசேட அவதானத்தைச் செலுத்துங்கள். கடந்த காலங்களில் சமுர்த்தி மற்றும் அஸ்வெசும போன்ற அரச உதவிகள் தகுதியானவர்களுக்கு சென்றடையவில்லையென்ற குற்றச்சாட்டும் முன் வைக்கப்பட்டுள்ளது. இந்த அரச உதவிகள் மீள் பரிசீலனை செய்யப்பட வேண்டும்.

அதேவேளை, கடந்த ஆறுமாத காலமாக மாத்தளை பிரதேச செயலக அபிவிருத்தி இணைப்புக் குழுக்கூட்டம் இடம்பெறவில்லை. 2024ஆம் ஆண்டு இறுதிக்கட்டத்தில் இக்கூட்டம் இடம்பெற்றுள்ளது. 2025ஆம் ஆண்டு புத்தாண்டு ஆரம்பிக்கப்படும் போது ஒரு மாற்றத்தை ஏற்படுத்தி பொதுமக்களுக்கு நல்லது செய்ய உறுதி பூணுவோமெனத் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் பிரதேச செயலாளர் சேனாதீர உட்பட அரச மற்றும் அரச சார்பற்ற அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

# யாழ். புனித மரியன்னையில் நத்தார் நள்ளிரவு ஆராதனை





(பு.கஜிந்தன்)

யாழ். மறை மாவட்ட ஆயர் அருட்கலாநிதி ஜஸ்ரின் பேர்னாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையிலான கிறிஸ்மஸ் நள்ளிரவு ஆராதனைகள் யாழ்ப்பாணம் புனித மரியன்னை பேராலயத்தில் இடம்பெற்றது.

பெருமளவான கத்தோலிக்க மக்கள் ஆராதனையில் பங்கு கொண்டனர்.

அதனைத் தொடர்ந்து யாழ்ப்பாண மாவட்ட 51 இராணுவத் தலைமையகம் மற்றும் யாழ். மறை மாவட்ட ஆயர் இல்லம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் நத்தார் விசேட நிகழ்வுகள் இடம்பெற்றன.

# பொதுமன்னிப்பின் கீழ் 8 கைதிகள் விடுதலை!



(சிவகுமார் திவியா)

நத்தார் பண்டிகையை முன்னிட்டு வவுனியா விளக்கமறியல் சிறைச்சாலையிலிருந்து 8 கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர்.

நத்தார் பண்டிகையை முன்னிட்டு ஜனாதிபதிக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின் கீழ் சிறு குற்றங்களுக்காகத் தண்டனை பெற்றிருந்த 389 பேர் நாடளாவிய ரீதியிலுள்ள சிறைகளிலிருந்து விடுதலை செய்யப்பட்டதாக சிறைச்சாலைகள் திணைக்களம் அறிவித்திருந்தது.

அந்தவகையில், வவுனியா விளக்கமறியல் சிறைச்சாலையில் சிறுகுற்றங்களுக்காகத் தடுத்துவைக்கப்பட்டிருந்த 8 பேர் நேற்று விடுவிக்கப்பட்டனர்.

வவுனியா விளக்கமறியல் சிறைச்சாலையின் பொறுப்பதிகாரி புத்திக பெரேரா தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

# மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் நத்தார் திருப்பலி!





(ஜோசப் நயன்)



மனிதத்தை உலகுக்கு வெளிப்படுத்திய இயேசுபிரானின் அவதாரத்தைச் சிறப்பிக்கும் கிறிஸ்து பிறப்பை முன்னிட்டு நேற்று (25) தேவாலயங்களில் விசேட வழிபாடுகளும் ஆராதனைகளும் இடம்பெற்றன.

மன்னார் மாவட்டத்தின் முதல் பேராலயமான மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில் அருட்தந்தையர்கள் இணைந்து திருவிழா திருப்பலியை கூட்டுத்திருப்பலியாக ஒப்புக்கொடுத்தனர்.

இதன்போது இயேசு பிறப்பைக் குறிக்கும் வகையில் நள்ளிரவு பாலன் திருச்சொருபம் வைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து கிறிஸ்மஸ் ஆராதனைகள் நடைபெற்றன. குறித்த ஆராதனைகளின்போது நாட்டு மக்களைப் பாதுகாக்கவும் நாட்டில் நீடித்த அமைதியும் மகிழ்ச்சியும் நிலவவும் விசேட பிரார்த்தனையும் ஆயரால் நிகழ்த்தப்பட்டது.

திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டதைத் தொடர்ந்து அனைவருக்கும் ஆயர் மற்றும் அருட்தந்தையர்களால் அருளாசி வழங்கப்பட்டது. கிறிஸ்மஸ் ஆராதனையை முன்னிட்டு தேவாலயத்துக் விசேட பாதுகாப்பும் வழங்கப்பட்டிருந்தது.

இதன்போது மன்னார் மறை மாவட்டத்தைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான பக்தர்கள் நள்ளிரவுத் திருப்பலியில் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

# பெண்களை தவறான செயலுக்கு அழைத்த பொலிஸ் உத்தியோகத்தர் நையப்புடைப்பு

(பு.கஜிந்தன்)

காங்கேசன்துறை பொலிஸ் நிலையப் பொலிஸ் உத்தியோகத்தரொருவர் மதுபோதையில் இருந்த நிலையில், பெண்ணொருவரை தவறான உறவுக்கு அழைத்துள்ளதாக காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்,

காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்தில் கடமை புரியும் பொலிஸ் உத்தியோகத்தரொருவர் நேற்று முன்தினம் மாவிட்டபுரம் பகுதியிலுள்ள பொலிஸ் நிலையத்துக்குச் சென்றுள்ளார். அங்கு பணிபுரியும் பெண் ஒருவரை தவறான உறவுக்கு அழைத்துள்ளார். அத்துடன், கடைக்கு வந்த இரு யுவதிகளிடமும் முறையற்ற விதத்தில் செயற்பட்டுள்ளார்.

இதன்போது, ஆத்திரமடைந்த குறித்த பெண் தனது கணவருக்கு தொலைபேசியில் தெரிவித்தார். இந்நிலையில், மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்துக்கருகில் வைத்து குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் நையப்புடைக்கப்பட்டு பொலிஸ் நிலையத்துக்கு கொண்டுசெல்லப்பட்டார்.

பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி குறித்த பெண்ணை இதுகுறித்து விசாரித்தபோது அப்பெண் நடந்த சம்பவத்தை தெரிவித்துள்ளார். இதேவேளை ,பெண்ணின் உறவினர் தன்னிடம் காணொளியும் உள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். உடனே குறித்த காவல்துறை உத்தியோகத்தர் குறித்த பெண்ணின் கணவன் மீது பொலிஸ் நிலையத்தில் வைத்து தாக்குதலும் நடத்தியுள்ளார்.

உடனடியாக பொலிஸார் குறித்த பொலிஸ் உத்தியோகத்தரை தடுத்து நிறுத்தினர். அதன்பின்னர் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பாதிக்கப்பட்டவர்களை அழைத்து சமரசம் பேசியுள்ளதுடன், முறைப்பாடு பதிவு செய்யவும் தயக்கம் வெளியிட்டார். இதையடுத்து, குறித்த விடயம் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாணப் பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜின் கவனத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டது.

இந்நிலையில், பொறுப்பதிகாரியை தொடர்புகொண்ட த.கனகராஜ், முறைப்பாட்டை முதலில் பதிவு செய்யுமாறு பொலிஸ் பொறுப்பதிகாரிக்கு அறிவுறுத்தினார். அதன்பின்னர் முறைப்பாட்டைப் பதிவு செய்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# யாழில் குடிவரவு குடியகல்வு அலுவலகம் திறக்க ஏற்பாடு

## இளங்குமாரன் எம்.பி. தெரிவிப்பு

(பு.கஜிந்தன்)

யாழ்ப்பாணத்தில் குடிவரவு குடியகல்வு திணைக்கள அலுவலகமொன்றை திறப்பதற்குத் தீர்மானித்துள்ளதாக தேசிய மக்கள் சக்தியின் யாழ்ப்பாணம் மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன் தெரிவித்தார்.

தனியார் ஊடகமொன்றின் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர்,

‘‘நாடு பொருளாதார ரீதியில் பின்னடைவை எதிர்நோக்கியுள்ள நிலையில், அதிகமானோர் வெளிநாடு செல்ல முயற்சிப்பதால் கடவுச்சீட்டைப் பெற்றுக்கொள்வதில் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. உலகத்துக்கு எடுத்துக்காட்டாக இன ஐக்கியத்துடன் கூடிய புதிய கடவுச்சீட்டொன்றை உருவாக்கி வெளியிட்டுள்ளோம்.

கடவுச்சீட்டை இலகுவாகப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளோம். வெகுவிரைவில் யாழ்ப்பாணத்தில் கடவுச்சீட்டு மற்றும் அடையாள அட்டைகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.மக்கள் கடவுச்சீட்டைப் பெற்றுக்கொள்வதற்காக யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்குச் செல்வதற்கு அதிக பணம் செலவிடப்படுவதுடன் சில முகவர்களால் ஏமாற்றத்துக்கும் உள்ளாகின்றனர்” - எனத் தெரிவித்தார்.

# கிரிக்கெட் உலகில் முக்கியத்துவம் வாய்ந்த பொக்சிங் டே இன்று

## மெல்பேர்ன், செஞ்சூரியன், புலவாயோவில் போட்டிகள் ஆரம்பம்

அகீல் சிஹாப்

கிரிக்கெட் உலகில் இன்றைய நாள் மிக முக்கியமான நாளாக கருதப்படுகிறது. கிரிக்கெட்டுக்கு மட்டும் அல்ல விளையாட்டு உலகில் ஒரு முக்கியமான நாள் தான் இன்றைய நாள். பொக்சிங் டே என அழைக்கப்படும் இன்றைய நாளானது நமது ஊரில் பெருநாள் என்றால் எப்படியோ, அதே போல் தான் வெளிநாட்டை சேர்ந்தவர்களுக்கு இந்த பொக்சிங் டே.

கிரிக்கெட்டுக்கும் பொக்சிங் டேயிற்கும் என்ன தொடர்பு, இந்த பெயர் எப்படி வந்தது? என்பது தொடர்பில் தற்போது அவதானம் செலுத்தலாம்.







**பொக்சிங் டே என்றால் என்ன ?**

கிறிஸ்மஸ் பண்டிகைக்கு அடுத்த நாள்



அதாவது டிசம்பர் 26ஆம் திகதி தான் பொக்சிங் டே என்று அழைக்கப்படும். அந்த நாளில் ஏதாவது பொக்சிங் போட்டி நடைபெறுமா என்று கேட்டால் அது தான் இல்லை. கிறிஸ்மஸ் கொண்டாட்டத்தின் போது வழங்கப்படும் பரிசுப் பொருட்கள் ஒரு பொக்சில் தான் வரும் அல்லவா. அந்த பரிசுப் பெட்டியை டிசம்பர் 26ஆம் திகதி தான் பிரித்து பார்ப்பார்கள்.

ஒரு சிலர் கிறிஸ்மஸ் அன்றே பரிசுப் பெட்டிகளை பிரித்து பார்ப்பார்கள். அப்போது வீட்டில் சேரும் பெட்டியில் பொருட்களை வைத்து ஏழை மக்களுக்கோ வீட்டில் பணிபுரிபவர்களுக்கோ மகிழ்ச்சியாக வழங்குவார்கள். இதனால் தான் கிறிஸ்மஸுக்கு அடுத்த நாள் பொக்சிங் டே என்ற பெயர் வந்தது. இந்த பொக்சிங் டே என்பது பிரித்தானியாவுடன் தொடர்புடைய ஒன்றாக உள்ளது. பிரித்தானியாவில் இது பொதுவிடுமுறை நாள். டிசம்பர் 26ஆம் திகதி சனிக்கிழமையாக இருந்தால் திங்களன்று விடுமுறை. ஞாயிறன்று வந்தால் செவ்வாய் அன்று விடுமுறை.

இந்த பொக்சிங் டே என்பது மதத்துடன் தொடர்புடைய நாளாகவும் உள்ளது. அயர்லாந்து மற்றும் ஸ்பெய்னின் கேட்டலோனியா பிராந்தியத்தில் இது செயின்ட் ஸ்டீஃபென்ஸ் தினமாக கொண்டாடப்படுகிறது.

பொக்சிங் டே அன்று வீட்டில் இருக்காமல் எங்கேயாவது வெளியே குடும்பத்துடன் சுற்றுலா செல்வது வழக்கம். அதனால் பொக்சிங் டே அன்று பல்வேறு விளையாட்டு போட்டிகள் நடைபெறுவது வழக்கம்.

குறிப்பாக ஆண்டுதோறும் அவுஸ்திரேலியா, நியூஸிலாந்து, தென்னாபிரிக்கா நாடுகளில் பொக்சிங் டே டெஸ்ட் போட்டி ஆண்டுதோறும் நடைபெறும். அன்று நடைபெறும் டெஸ்ட் போட்டியை காண வழக்கத்துக்கு மாறாக இரு மடங்கு கூட்டம் சேரும். ஆஷஸ் டெஸ்ட் போட்டி பொக்சிங் டே அன்று மெல்போர்னில் நடைபெற்றால், பார்வையாளர்களின் எண்ணிக்கை ஒரு இலட்சத்தை தொடும்.

பொக்சிங் டே அன்று அதிக மக்கள் போட்டியை காண்பார்கள் என்பதால், அன்றைய தினம் விளையாட்டு உலகில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது. இந்த பொக்சிங் டே கலாசாரம் முதலில் இங்கிலாந்தில் தான் தோன்றியது. பின்னர் அவர்கள் ஆண்ட நாட்டில் எல்லாம் கிறிஸ்மஸுக்கு அடுத்த நாள் பொக்சிங் டே சிறப்பாக கொண்டாடப்படும்.



1950இல் நடைபெற்ற முதல் பொக்சிங் டே டெஸ்ட் போட்டியின் போது...



**முதல் பொக்சிங் டே டெஸ்ட்**

1892 ஆம் ஆண்டு கிறிஸ்மஸ் சமயத்தில் அவுஸ்திரேலியாவில் உள்ள மெல்போர்ன் கிரிக்கெட் மைதானத்தில் ஷெஃபீல்ட் ஷீல்ட் போட்டி நடைபெற்றது. விக்டோரியா மற்றும் நியூ சவுத் வேல்ஸ் அணிகள் நேருக்கு நேர் மோதின. இதற்குப் பிறகு, முதல் சர்வதேச பொக்சிங் டே டெஸ்ட் இங்கிலாந்து மற்றும் அவுஸ்திரேலியா இடையே 1950ஆம் ஆண்டு நடந்தது. ஆனால், இந்த டெஸ்ட் டிசம்பர் 26 க்குப் பதிலாக டிசம்பர் 22 அன்று தொடங்கியது. டெஸ்ட்டின் ஐந்தாவது நாள் பொக்சிங் டேயாகும்.

**பொக்சிங் டே வழக்கங்கள்**

தொலைக்காட்சி இல்லாத நாட்களில் டிசம்பர் 25 பெரும் போட்டிகள் நடைபெறும். பிரித்தானியாவில் பார்வையாளர்கள் கையுறைகளையும் தலையில் தொப்பியையும் அணிந்து கொண்டு கால்பந்து ஆட்டத்தை காண மைதானத்தில் கூடுவர். ஆனால் இந்த வழக்கம் 1950களில் மாறியது.

தற்போது கிறிஸ்மஸ் நாளில் உதைபந்து போட்டிகள் நடைபெறுவதில்லை. கடைசியாக கிறிஸ்மஸ் தின உதைபந்து போட்டி, 1957ஆம் ஆண்டு நடைபெற்றது. ஆனால் பொக்சிங் டேவில் கிரிக்கெட் டெஸ்ட் போட்டிகள் ஆண்டுதோறும் நடைபெற்று வருகின்றன. சிவப்பு நிற மேல் அங்கிகளை அணிந்து கொண்டு வேட்டை நாய்கள் சூழ குதிரை சவாரி செய்வது இந்த தினத்தோடு தொடர்புடைய ஒன்று. தற்போது ஓநாய் வேட்டை தடை செய்யப்பட்டுவிட்டதால் குதிரை சவாரிகள் மட்டும் மேற்கொள்ளப்படுகின்றன.

**2024இல் மூன்று பொக்சிங் டே டெஸ்ட்**

இந்த ஆண்டில் மூன்று பொக்சிங் டே டெஸ்ட் போட்டிகள் நடைபெற்றன.

வழக்கமாக அவுஸ்திரேலியா மற்றும் தென்னாபிரிக்காவில் போட்டிகள் நடைபெற்றுவந்தாலும் தற்போது நீண்ட காலத்தின் பின் சிம்பாப்வே மண்ணிலும் பொக்சிங் டே டெஸ்ட் போட்டி நடைபெறுகிறது.

இந்திய – அவுஸ்திரேலிய அணிகள் மோதும் 05 போட்டிகள் கொண்ட பார்டர் - கவாஸ்கர் டெஸ்ட் தொடரின் மூன்றாவது பொக்சிங் டே டெஸ்ட் போட்டியாக வரலாற்று சிறப்புமிக்க மெல்போர்ன் மைதானத்தில் இலங்கை நேரப்படி அதிகாலை 5.00 மணிக்கு ஆரம்பமானது.

சுற்றுலா பாகிஸ்தான் - தென்னாபிரிக்க அணிகள் மோதும் இரு போட்டிகள் கொண்ட தொடரின் முதல் போட்டி இன்று பொக்சிங் டே டெஸ்டாக செஞ்சூரியனில் இலங்கை நேரப்படி பிற்பகல் 1.30 மணிக்கு ஆரம்பமாகிறது.

சுற்றுலா ஆப்கானிஸ்தான் - சிம்பாப்வே அணிகள் மோதும் இரு போட்டிகள் கொண்ட தொடரின் முதல் போட்டி இன்று பொக்சிங் டே டெஸ்டாக புலவாயோவில் இலங்கை நேரப்படி பிற்பகல் 1.30 மணிக்கு ஆரம்பமாகிறது.

# அதிக சம்பளத்தில் கோஹ்லியை முந்தி முதலிடம் பிடித்த பந்த்

இந்திய கிரிக்கெட் வீரர்களில் ஒரு ஆண்டில் அதிக வருமானம் ஈட்டுபவர்கள் வரிசையில் விராட் கோஹ்லியை பின்தள்ளி ரிஷப் பந்த் முதலிடம் பிடித்துள்ளார்.

அண்மையில் நிறைவடைந்த ஐ.பி.எல். மெகா ஏலத்தில் இந்திய அணியின் விக்கெட் கீப்பர் ரிஷப் பந்த் அதிகபட்சமாக சுமார் ரூ.27 கோடிக்கு லக்னோ அணியால் ஏலத்தில் எடுக்கப்பட்டார். பெங்களூர் அணியால் விராட் கோஹ்லி ரூ.21 கோடிக்கு தக்கவைக்கப்பட்டார்.



இந்நிலையில், இந்திய வீரர்களில் அதிக ஊதியம் பெறும் வீரர்கள் வரிசையில் விராட் கோஹ்லியைப் பின்னுக்குத் தள்ளி ரிஷப் பந்த் முதலிடத்தைப் பிடித்துள்ளார். அதன்படி, ஒரு வருடத்தில் ரூ.32 கோடி அவர் சம்பளம் பெறுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அவருக்கு அடுத்தபடியாக, விராட் கோஹ்லி ரூ.28 கோடியுடன் 2ஆவது இடத்தைப் பிடித்துள்ளார்.

ரிஷப் பந்துக்கு இருவிதமான வருமானங்களில், இந்திய கிரிக்கெட் சபை ஒப்பந்தம் மற்றும் ஐ.பி.எல். ஒப்பந்தம் ஆகியவை உள்ளன. அவற்றில் பி.சி.சி.ஐ. ஒப்பந்தத்தில் ஏ பிரிவு வீரர்களுக்கு வருடத்துக்கு ரூ.05 கோடியும் ஐ.பி.எல். சம்பளமாக ரூ.27 கோடியும் கிடைக்கும்.

இந்திய வீரர் விராட் கோஹ்லிக்கு ஏ பிளஸ் பிரிவில் ரூ.07 கோடியும் ஐ.பி.எல்லில் ரூ.21 கோடியும் சம்பளமாக பெறுவார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அடுத்தாண்டு மார்ச் மாதத்தில் பி.சி.சி.ஐ. புதிய ஒப்பந்தத்தை அறிவிக்கும்போது ரிஷப் பந்தின் சம்பளம் அதிகரிக்க வாய்ப்புள்ளது. மேலும், அவர் ஏ பிளஸ் பிரிவுக்கு முன்னேற வாய்ப்புள்ளது. அவர் மூன்றுவித வடிவங்களிலும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகிறார்.

விராட் கோஹ்லி சர்வதேச ரி20 போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்றுவிட்டதால் அவருக்கு குறைப்பு செய்ய வாய்ப்புள்ளது. ஷ்ரேயாஸ் ஐயர், வெங்கடேஷ் ஐயர் இருவரும் ஏலத்தில் அதிக சம்பளம் பெறுபவர்களின் பட்டியலில் இருந்தாலும் சர்வதேச போட்டிகளில் விளையாடும் பட்சத்தில் அவர்களுக்கு சம்பளம் அதிகரிக்க வாய்ப்புள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சம்பியன்ஸ் கிண்ண தொடரின் போட்டி அட்டவணை வெளியீடு

பாகிஸ்தானில் நடைபெறவுள்ள 08 அணிகள் பங்கேற்கும் ஐ.சி.சி சம்பியன்ஸ் கிண்ண கிரிக்கெட் தொடருக்கான போட்டி அட்டவணை நேற்று முன்தினம் (24) உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்டது. அதன்படி, பெப்ரவரி 19 முதல் மார்ச் 09 வரை டுபாய், லாகூர், கராச்சி, ராவல்பிண்டி ஆகிய இடங்களில் போட்டிகள் நடைபெறவுள்ளன.

பாகிஸ்தானின் போட்டிகள் பாகிஸ்தானிலும் இந்தியாவின் போட்டிகள் டுபாயிலும் நடத்தப்படும் எனவும் இப்போட்டிகளுக்கான வரவேற்பு நாடு என்ற உரிமையை பாகிஸ்தான் கொண்டிருக்கும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

2017க்குப் பின்னர் மீண்டும் சம்பியன்ஸ் கிண்ணத் தொடர் நடைபெறவுள்ளது. இந்தியா, இலங்கை ஆகியவற்றுடன் கூட்டிணைந்து 1996 உலகக் கிண்ணப் போட்டியை நடத்திய பாகிஸ்தானில், 28 வருடங்கள் கழித்து முதல் தடவையாக ஐ.சி.சி. போட்டி நிகழ்ச்சி நடைபெறவுள்ளது. 2017இல் நடத்தப்பட்ட




சம்பியன்ஸ் கிண்ணப் போட்டி முறைமையே 2025இலும் பின்பற்றப்படவுள்ளது.

சம்பியன்ஸ் கிண்ண கிரிக்கெட் போட்டியில் பங்குபற்றும் 08 அணிகள் இரண்டு குழுக்களாக வகுக்கப்பட்டு முதல் சுற்று லீக் முறையில் நடத்தப்படும். நடப்பு சம்பியனான பாகிஸ்தான், இந்தியா, நியூஸிலாந்து, பங்களாதேஷ் ஆகியன ஏ குழுவிலும் ஆப்கானிஸ்தான், அவுஸ்திரேலியா, இங்கிலாந்து, தென்னாபிரிக்கா ஆகியன பி குழுவிலும் இடம்பெறுகின்றன.

இந்த இரண்டு குழுக்களிலும் லீக் சுற்று முடிவில் முதல் இரண்டு இடங்களைப் பெறும் அணிகள் அரை இறுதிகளில் விளையாட தகுதிபெறும். இந்தியா அரையிறுதிக்கு முன்னேறினால் அப்போட்டி துபாய் சர்வதேச விளையாட்டரங்கில் நடைபெறும். அத்துடன், இறுதிப் போட்டியில் விளையாட இந்தியா தகுதிபெற்றால் அப்போட்டியும் டுபாயிலேயே நடைபெறும். ஒருவேளை இந்தியா தகுதிபெறாவிட்டால் அப்போட்டிகள் பாகிஸ்தானில் நடைபெறும்.

# தேசிய மட்ட ஹொக்கி போட்டியில் பதுளை அல்-அதான் அணிக்கு இரண்டாமிடம்

(அப்துல் வாஹிட் ஏ. குத்தூஸ்)

அகில இலங்கை பாடசாலைகள் ஹொக்கி சங்கம் ஏற்பாடு செய்திருந்த தேசிய மட்ட பாடசாலை அணிகளுக்கிடையிலான ஹொக்கி போட்டித் தொடர் மாத்தளை – அலுவிஹார பேர்னாட் மைதானத்தில் கடந்த 04 நாட்களாக நடைபெற்றது. இப்போட்டியின் போது ஜே பிரிவில் முதன் முறையாகப் போட்டியிட்டிருந்த பதுளை அல்-அதான் அணி இரண்டாமிடத்தைப் பெற்றுக்கொண்டது.

இத் தேசிய மட்டப் போட்டியில் 08 பிரிவுகளில் 56 அணிகள் போட்டியிட்டிருந்தன. இப்போட்டியில் முதல் தடவையாகப் போட்டியிட்டு, வெள்ளிப் பதக்கத்தை அல்-அதான் அணி சுவீகரித்துக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. அல்-அதான் விளையாட்டுப் பொறுப்பாசிரியர் மன்சூர் பளீல் தலைமையில் பயிற்றுவிப்பாளர் எம். இர்ஷாத்தின் வழிகாட்டலில் எம். அமானுல்லாஹ், உவைசுல் கர்னி ஆகியோர் மாணவ அணியைப் பயிற்றுவித்திருந்தனர்.

அம்ஜத் ஹசன் தலைமையில் வெற்றியீட்டிய அல்-அதான் அணிக்கு அதிபர் எம்.எஸ்.எம். ஸரூக் ,பாடசாலை கல்விச் சமூகம் சார்பில் பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்துள்ளார்.



Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7